www.tamilarangam.net

தை/மாசி/ பங்குனி 1993

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேய்கள் ஆட்சியில்

இந்த வருடத்தொடக்கத்தில் இலங்கை அரசு தனது இனவெறி முகத்தை கடலில்வைத்து தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்துக் காட்டியுள்ளது.

இலங்கை அரசின் இனவெறிப்படைகள் கிளாலி கடல் ஏரியில் தமிழ்மக்கள் பயணஞ்செய்த படகுகள் மீது வெறித்தனமான தாக்குதல் மேற்கொண்டபோது பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்பதே புத்தாண்டுச் செய்தியானது.

கிளாலி நடுக்கடலில் வைத்தே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. வடக்கிலிருந்து புறப்பட்டுவந்த ஐந்து படகுகளில் குறைந்தது 75 பேராவது பயணஞ் செய்திருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுவருடத்திற்கு, கொழும்பில் இருக்கும் தம் உறவினரைக் காண்பதற்கோ அல்லது தமது அலுவலல்களுக்காகவோ எதிர்பார்ப்புகளோடு வந்த பலர் இச்சம்பத்தினால் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு வருவதற்கு தற்போது நடைமுறையிலுள்ள ஒரே வழி இந்தக் கடல் ஏரி என்பது கவனிக்கத்தக்கது. தாங்கள் பயணஞ்செய்த ஏரிவழியாக இரவு வந்து கொண்டிருந்த நேரம் கடற்படைப்படகு ஒன்று தங்கள் படகுகளிற்கு அருகில் வந்த படகை நிறுத்துமாறு உத்தரவிட்டதாகவும் படகோட்டிகள் படகை நிறுத்தியபோது திடீரென "டோர்ச்" வெளிச்சம் தங்கள் படகுகள் மீது படரவிடப்பட்டுக் கூடவே துப்பாக்கிவேட்டுகள் தீர்க்கப்பட்டதாகவும் , குண்டுபட்டும் கடலில் வீழ்ந்தும் பலர் கொல்லப்பட்டனரென்றும் இவர்கள் பின்னர் படகுகளை தமது படகுடன் இணைத்துக் கடற்படையினர் இழுத்துச்சென்றதாகவும் கடல் கொந்தளிப்பு அதிகமாயிருந்ததால் சில படகுகள் பிணைப்புகளிலிருந்து விடுபட்டதால் சிலர் தப்பமுடிந்தது என்றும் உயிர்தப்பியவர்கள் பீதியுடன் தெரிவித்துள்ளனர்.

இப்படி விசம்மத்தனமாக அப்பாவி மக்களைச் சுடுவதில் திறமைவாய்ந்த அரசின் வேட்நாய்களினால் மொத்தமாக எத்தனைபேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரியாததால் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமுள்ள பயணஞ்செய்தவர்களின் உறவினர்கள் செய்தி வரும்வரை கவலையுடன் காத்திருக்கின்றனர்.

இலங்கையரசின் இனவெறிகூர்மையடைந்த காலந்தொட்டு இந்த படகுக்கொலைகள் புதியவை அல்ல. வீரமற்ற கடற்படைவெறியர்களால் பச்சிளஞ்சிறுமியுடன் பலர் துடித்து இறந்த குமுதினிப்படகை மறந்துவிடமுடியுமா?

( 44ம் பக்கம் பார்க்க)

www.tamilarangam.net



வானம் பொய்த்தாலும் பொய்க்கக்கூடும், கிழக்கு மாகாணத்தில் புலிகளினால் அப்பாவிமக்கள் கொல்லப்படுவது தவறாமல் நடந்துகொண்டிருக்கிறது.

சொன்னால் வெட்கம் இதற்கு போராட்டம் என்றும் பெயராம்.

புலிகள் நடத்திக் கொண்டிருப்பது தேசிய விடுதலைப் போராட்டம் என்று யாராவது சொல்வாராயின் இதோ அதன் வரலாற்றில் புதிய களமாகியுள்ளது பொலநறுவை மாவட்டம்.

கிராமங்களின் பெயர்கள் தான் வித்தியாசம், மற்றும்படி இதுவரை நடைபெற்ற கொலைகளுக்கும் கடைசியாக நடைபெற்றவற்றிற்குமிடையில் அதே ஒற்றுமை தான்: கொல்லப்பட்டவர்கள் அனைவரும் குழந்தைகள் உட்பட அப்பாவிமக்கள்.

23.10.92 அன்று அக்பர்புரம், அகமட்புரம், பள்ளியகொடல, பம்புரான ஆகிய கிராமங்களில் பச்சிளங் குழந்தைகளும் பெரியவர்களுமாக 183க்கு மேற்பட்ட அப்பாவி முஸ்லிம் மக்களை புலிகள் வெற்றிகரமாக கொன்று குவித்து தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மன்னிக்கவேண்டும் தமிழ்மக்களின் தேசியவிடுதலைப் போராட்டத்திற்கு மங்காத பெருமை ஈட்டிடிக் கொடுத்துவிட்டு தொடர்ந்தும் போராட்டத்தின் தலைமை சக்தியாக அணிவகுத்துள்ளனர்.

நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமுற்று தவிக்கின்றனர்.

தமிழ்மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்கு இன்னும் எவ்வளவு அப்பாவி மக்களின் இரத்தம் புலிகளுக்குத் தேவைப்படுகிதோ தெரியாது.

ஆனால் இனக்குழுக்களுக்கிடையில் குத்துவெட்டுக்கள் நடப்பதும், வருடக்கணக்காகப் போர்காலங்கள் நிலவுவதும் , பொருளாதாரம் சிதைந்த நிலையில் பஞ்சம் தலைவிரித்தாடுவதும், நாடுகளின் ஸ்திரமற்ற நிலையும் ஏகாதிபத்திய நாடுகள் அமைதி

www.tamilarangam.net

காக்கும் போர்வையில் இந்த நாடுகளில் தமது படைகள் மூலம் இறங்கி தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு சாதகமாக அமைந்துவிடுகின்றது என்பது வரலாற்றில் மீண்டும் மீண்டும் மீண்டும் மீண்டும் படித்துப் புளித்துப் போனாலும் பிரயோசனமில்லாமல் பலியாகிக் கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில் உலகநிலமைகளை இனியாவது தமது குறுகிய இன மத வட்டங்களிலிருந்து விடுபட்டு மூன்றாம் உலகநாடுகளிள்ள மக்கள் நோக்கத் தவறுவார்களேயானால் இருக்கின்ற மிச்ச சொச்ச உரிமைகளையும் வளங்களையும் ஏகாதிபத்திய நாடுகளிடம் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு, எமது போர்குணங்களனைத்தையும் இன மத வாதங்களுக்கு அடகு வைத்துவிட்டு காலகாலமாக அடிமை இருளில் வீரம் இழந்து விலங்குகளாய் சோரம் போய்க்கொண்டிருக்க வேண்டிவரும்.

இந்த அபாய அறிவிப்பு உலகமெங்கும் பரவலாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றது ஆனால் நாங்கள்தான் செவிகளையும் விழிகளையும் இறுகப் பொத்திக்கொண்டு தத்தமது இனமென்றும் மதமென்றும் வேலிப்போட்டுக் கொண்டு கொலைவெறியாட்டங்களையெல்லாம் தேசியவிடுதலைப் போராட்டங்கள் என்று அழைத்துக்கொண்டு கொலைகார கும்பல்களுக்கெல்லாம் விடுதலைசக்திகள் என்று பெயர் சூட்டிக்கொண்டு சக இனத்தவரின் இரத்தம் நிலத்தில் ஆறாக ஒடுதல் கண்ட பின்னரும் "ஆகா பார் தேசியவிடுதலை! இதோ வருகிறது ஒடுக்குதலுக்கு எதிரான போர்! வாழ்க குடியேற்ற தடுப்பு யுத்தம்! வளர்க எல்லைகளை காக்கும் போர்! " என்று துள்ளிக் குதித்தாடுகின்றோமே எங்களுக்கு இது எப்படி கேட்கும். நாங்கள் இப்படி இருக்கும் வரை அந்த வாய்ப்பு இல்லவேஇல்லை.

அடக்குமுறைக்கெதிரான போராட்டத்தை தமது குறுகிய நலன்களுக்காக திசைதிருப்பி மக்களது வாய்களை மூடி மக்களின் நலனில் எந்தவகையிலும் சம்பந்தப்படாத யுத்தங்களை ஆரம்பித்து சோமாலியாவை குட்டிச்சுவராக்கி மக்களை பட்டினிச்சாவிற்கு இரையாக்கி இன்று ஐ.நா என்ற பெயரில் ஏகாதிபத்தியப் படைகளை மீண்டுமொறுமுறை இந்தியசமுத்திரத்திற்குள் வரவழைத்துள்ளனர் சோமாலியாவின் விடுதலைப் போராளிகள் மூன்றாம் உலகினில் போரும் பஞ்சமும் என்றால் ஆயுத சந்தையாகவும் தமது கால்களை ஊன்றவும் என மேற்குலகிற்கும் அமெரிக்காவிற்கும் இலாபம் தானே. இந்த போர்களை உருவாக்கி குளிர்காயும் மூன்றாம் உலக நாடுகளிலுள்ள யுத்த வியாபாரிகளுக்கும் தரகு கிடைத்தால் பிறகென்ன தமது நலனுக்காய் தேசங்களின் தலைவிதியையே மாற்றிவிடுவார்கள். யுத்தங்களை நியாயப்படுத்த காரணமா இல்லை? இனத்தின் விடுதலை மதத்தின் விடுதலை என்ற பெயரினில் அறியாமைக்குள் மூழ்கியிருக்கும் மக்களின் பலவீனத்தைத் தமது பலமாக்கி நாடுகளை யுத்த களமாக்குவர்.

இந்தியாவின் அடிப்படைப் பிரச்சனை எங்கோ இருக்க மக்களை மதவாதங்களுக்குள் மூழ்கடித்து வைத்திருக்கும் தலைமைகள் தமது திசைத்திருப்பல் அரசியலை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் இந்த வேளையில் நாம் மிக அவதானமாக நோக்க வேண்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடயம் என்னவென்றால் குறுகிய இனமத வாதங்களிலிருந்து விடுபடும்வரை உலக நிகழ்வுகளை விரிந்த பார்வையுடன் நோக்கும்வரை ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளிலிருந்தும் அவற்றிற்கு சாதகமான பொருளாதார சுரண்டலிலிருந்தும் கொலைகார யுத்தங்களிலிருந்தும் மூன்றாம் உலகமக்கள் விடுதலை பெறுவதென்பது சாத்தியமற்றது.

பாபர் மசூதி இடிப்பும் முஸ்லிம்களுக்கெதிரான இந்துவெறியும் இலங்கையில் புதிதாக அரும்பியுள்ள முஸ்லிம்களுக்கெதிரான தமிழ்இனவெறியும் முஸ்லிம் அடிப்படைவாதத்தினைக் கிளப்பி ஒரு புதிய பிரச்சனையாகவும் தொடர்ச்சியான இரத்தக்களரிகளுக்கு விதையாகவும் அமைந்துவிடக்கூடிய அபாயம் காத்திருக்கிறது. நாம் மேலும் மேலும் கூறுபடுவதை எதிர்பார்த்து வெளியே ஏராளம் கழுகுகள் காத்திருக்கின்றன. எமது நாடுகளின் தலைவிதியையும் அரசுகளின் ஒடுக்குதல்களுக்கெதிரான போராட்டங்களையும் தடுத்து நிற்கும் இந்த இன மத வாதங்களையும் இவற்றை நெறிபடுத்தும் இனவாதத் தலைமைகளையும் எமது வட்டங்களிலிருந்து விடுபட்ட நாம் குற்றவாளிகளாக இனங்காணும்வரை நாம் மேற்குநாடுகளின் அடிமைகளென்பதையும், யுத்தங்களின் புதல்வர்களென்பதையும் மறந்துவிட கூடாது கூடாது கூடாது.


தேனீ

**காலாண்டிதழ்**

**தனிப்பிரதி: 4 டி.எம்**
**வருடசந்தா: 20 டி.எம்**

**உங்களிடமிருந்து ஆக்கங்களையும், விமர்சனங்களையும் தேனீ எதிர்பார்க்கின்றது.**

*தேனீ பற்றிய அனைத்து தொடர்புகட்கும்:*

THEENEE,
C/O: SALZ,
WAIBLINGER STR.59,
7000 STUTTGART 1,
GERMANY.

*சந்தாவிற்கான வங்கி இலக்கம்:*


THENEE,
LANDESGIROKASSE-STUTTGART,
GERMMANY.
SPARKONTO NR: 2300174892,
BLZ 600 501 01.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





எனது மகள்
வளர்ந்தவளானாள்.
வினாக்களை வரிசையாக
அடுக்கினாள்.

அம்மா!
நாங்கள் ஏன்
அகதிகளானோம்?
என் தாய்நாடு எங்கே?
என் தாய் மொழி எது?
நாங்கள் ஏன்
கறுப்பர்களாயிருக்கிறோம்?
"அவர்களால்" ஏன்

www.tamilarangam.net

ஒதுக்கப்படுகிறோம்?
துருக்கித் தோழி ஏன்
எரிக்கப்பட்டாள்?

விடைகள் தெரியா
விழிக்கும் வேளையில்.......
"அவர்கள்" வந்தனர்
குண்டுகள் கொண்டு
தாக்கி மகிழ்ந்தனர்.

எனது மகளும்
எனது நண்பியும்
எரிந்து கருகி
இறந்து போயினர்.

எனது
சுவாசப்பையில் மூச்சு
அழுது துடிக்கிறது
இறுதி வார்த்தைகளுக்காய்.

அம்மாக்களே!
உங்கள் பிள்ளைகளும்
வளர்ந்தவர்களாவர்கள்.
விடைகளைத் தேடுங்கள்
விரைவாய் இப்போதே.

-------- நிருபா.

www.tamilarangam.net



## சுகந்தினி அமிர்தலிங்கம்

சுவர்க்கடிகாரம் ஒன்பது முறை அடித்து ஒய்ந்தது. திடுக்குற்று கண்விழித்த சியாமளா ஒன்பது மணிவரை தூங்கிவிட்டேனா என்ற கவலையுடன் எழுந்து பல் துலக்குவதற்காக பாத்ரூம் சென்றாள். இன்றைக்கு தைப்பொங்கலும் அதுவுமாக இவ்வளவு நேர நித்திரை. நினைத்துப்பார்த்தாள் சியாமளா. ஜெர்மனிக்கு வந்து அவளுக்கு சோம்பறித்தனம்தான் கூடி இருந்தது. அதுவும் இந்த வின்ரர் காலத்தில் எவ்வளவு நேரம் சென்றாலும் படுக்கையை விட்டு எழ மனம் வராது. ஜன்னலினூடாக வெளியே பார்க்கிறாள். வெண்பஞ்சு பொதிபோல பனிக்குவியல் வீட்டு முகடு மரம், தடி, ரோட்டெல்லாம் குவிந்திருந்தது. ஒன்பது மணியாகியும் ரோட்டில் சனநடமாட்டம் இல்லாது ஒரே அமைதியாக இருந்தது. ஊரில் என்றால்.... தைப்பொங்கல் நாளன்று எவ்வளவு மகிழ்ச்சி, எவ்வளவு கொண்டாட்டம்! நான்கு வருடங்களிற்கு முன்பு ஊரில் எப்படியெல்லாம் பொங்கல் கொண்டாடினோம்.... மகிழ்ந்திருந்தோம்.... அம்மா, ஐயா, தம்பி தங்கைகள், மாமி, சின்னம்மா...... சியாமளாவின் மனம் வெறுமையை உணர்ந்து நினைவுகள் எங்கோ அலைய அப்படியே சோபாவில் உட்கார்ந்துவிட்டாள்.

www.tamilarangam.net

முற்றத்தில் நின்ற பூவரச மரத்தில் இருந்து காகம் "வாள் வாள்" என்று கத்தியது. குசினிக் கொட்டிலில் இருந்து வெளியே வந்த செல்லம்மாவின் வாய் முணுமுணுத்தது. "இந்தப் பாள்பட்ட காகம் எந்தநேரமும் கத்தியபடி. காலமை தேத்தண்ணியோடை வெளியிலை போன மனுசனை இன்னம் காணல்லை. மணி பன்னிரண்டரை ஆகுது. பிள்ளை சியாமளா இன்னம் என்ன தைத்துக்கொண்டிருக்கிறாய்? பள்ளிக்கூடம் போன பிள்ளைகள் வரப்போகுதுகள். சாப்பாட்டை ஆயத்தப் படுத்து" என வாய் ஓயாது சொல்லிக் கொண்டே போனாள். வருகிறமாசம் தைப்பொங்கல் வருவதால் சியாமளாவிற்கு தையல்வேலை நிறைய இருந்தது. ஊரில் உள்ள சின்னஞ் சிறிசுக்கெல்லாம் அழகாக சட்டை தைத்துக் கொடுப்பாள். அன்பும் பண்பும் நிறைந்த சியாமளா செல்லம்மா, சிவபிரகாசத்தின் மூத்தமகள். வயது 28 ஆகியும் கல்யாணம் என்னும் சடங்கு இன்னம் அவள் வாழ்விற்கு எட்டவில்லை. சியாமளாவைத் தொடர்ந்து தம்பி இளங்கோ O/L முடித்துவிட்டு A/L முதல் வருடம் படித்துக் கொண்டிருந்தான். தங்கை மஞ்சுளா 8ம் வகுப்பிலும் கடைக்குட்டி ராசாத்தி 3ம் வகுப்பிலும் படித்துக்கொண்டு இருந்தார்கள். சியாமளாவும் ஊரிலுள்ள பாடசாலையில் A/L பாஸ் செய்துவிட்டு வேலைகளுக்கெல்லாம் விண்ணப்பம் செய்து எதுவும் கிடைக்காத நிலையில் தையல் தைப்பதில் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தாள். சியாமளாவின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அவளை எந்த துறையிலாவது படிபிக்க வேண்டும் என்றுதான் சிவபிரகாசத்தாருக்கு ஆசை. ஆனால் பணத்திற்கு என்ன செய்வது? வெறும் தோட்டக்காரனான அவரால் கெட்டிக்காரப்பிள்ளைகளைக்கூட படிப்பிக்க முடியவில்லையே என கவலைப்படுவார். "ஐயா நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பாதையுங்கோ. தம்பியை எப்படியும் யுனிவேசிற்றி வரை படிப்பிப்பம்" என சியாமளா ஆறுதல் சொல்வாள்.

வேலிப்படலை திறந்த சத்தம் கேட்டு செல்லம்மா நிமிர்ந்து பார்க்க சிவபிரகாசத்தார் சால்வையை தலையில் போட்டபடி வெயில் தாங்காது வேகமாக நடந்து வருவது தெரிந்தது.

"என்ன பாருங்கோ ஏதும் நல்ல சேதியோ" என்றபடி செல்லம்மா எழுந்து வந்து அவருடன் விறாந்தைக்குந்தில் அமர்ந்து கொண்டாள். முற்றத்து வேப்பமரக்காற்று வெயிலுக்கும் வியர்வைக்கும் இதமாக இருந்தது.

"ஓம் செல்லம் பிள்ளை சியாமளா எங்கை? நல்ல கல்யாணம் ஒன்று பொருந்தி இருக்கு. பெடியன் ஜெர்மனியிலையாம். தாய் தகப்பன் இல்லை. தமக்கைகாரியுடன்தான் வளர்ந்ததாம். இப்ப ஜெர்மனிக்குப் போய் 9 வருடமாம் நல்ல இடம், நல்ல குடும்பம் எனக் குசுகுசுத்தார். எப்படியாவது இந்தக்கல்யாணத்தை முடிச்சுப்போடவேணும் என்றார் மிக்க மகிழ்ச்சியாக.

"மெய்யப்பாருங்கோ, சீதனம் பிரச்சனை என்ன மாதிரியாம்" என ஆவல் அடக்கமாட்டாது செல்லம்மா புருஷனிடம் கேட்டாள்.

"சீதனம் என்ன.... வீடு, வளவு, நகை 15 பவுன், பிள்ளையை அனுப்புகிற

www.tamilarangam.net

செலவு இரண்டு லட்சமும் நாமள் பொறுக்கவேணும். வீடுவளவு நகை குடுக்க வேணும் தானே." ஆனால் இரண்டு லட்சத்திற்கு இப்ப எங்கே போவது உள்ளுக்குள் ஏங்கத் தொடங்கினார்.

" இருக்கிறத் தோட்டக்காணியையும், பனைவளவுத்துண்டையும் விற்றால் ஒரு ஒண்டரை தேறும்.மிகுதிக்கு உங்கடை தங்கச்சியிட்டை கேட்டுப்பார்ப்பம். பிள்ளையை முதல் அனுப்புவம். அவளின் வாழ்க்கைக்கு இன்னம் எவ்வளவு செய்யவேணும் என்று இருந்தனான். பிள்ளை வெளிநாட்டுக்குப் போனால் பிறகு எங்களுக்கு என்ன குறை வரப்போகுது" என்று செல்லம்மா தாய் மனத்தோடு சொன்னாள்.

தோட்டக்காணி விற்கப்பட்டு, பணம் கைமாற்றுப் பெற்று ஊரில் கச்சேரியில் வேலைபார்க்கும் சிவராஜவுடன் சிவபிரகாசத்தார் மகளையும் கூட்டிக்கொண்டு கொழும்பு சென்று பாஸ்போட் அலுவல், ரிக்கெற் எல்லாம் முடித்துக் கொண்டு தைப்பொங்கலுக்கடுத்த நாள் விமானப்பயணம் ஒழுங்கு செய்யப்பட்டது.

பூட்டிக்கிடந்த சியாமளாவின் மனதிலும் பலவிதமான வண்ண வண்ணக் கனவுகள் வந்துபோயின. அறியாத கணவன், தெரியாத முகம், வெளிநாட்டு வாழ்க்கை, சகல செல்வங்களுடனும் அன்பான கணவனுடனும் எப்படியெல்லாம் குடும்பம் நடத்தவேணும் என்றெல்லாம் கற்பனை உலகில் மிதந்தாள். பெற்றோர், உற்றார், தம்பி, தங்கைகள் விமானநிலையம் வரை வந்து அழுத கண்களுடன் சோகம் தாங்காது வழி அனுப்பி வைத்தனர். சியாமளாவும் விமானத்தினுள் இருக்கும் போதும் பெற்றோர் சகோதர பிரிவுதாங்காது அழுத வண்ணமே இருந்தாள். அவர்களின் பிரிவை அவளால் தாங்கமுடியவில்லை.

அந்த விமானம் பிராங்போர்ட் ஏயர்போட்டில் தரை இறங்கி ஓடி நின்றது. மற்றப் பிரயாணிகளுடன் சியாமளாவும் தனது பையை எடுத்துக்கொண்டு இறங்கி வெளியில் வரவும் அங்கு மாப்பிள்ளை செல்வச்சந்திரன் அவளை வரவேற்க தன் நண்பனுடன் நிற்பது தெரிந்தது. அறிமுகங்கள், சுகசெய்திகள் முடிந்ததும் சியாமளாவைதன் காருக்கு அழைத்துச் சென்றான் அவன்.

ஜெர்மனியின் பரந்து விரிந்த சாலையில் வாகனங்கள் வேகமாக செல்வதையும், நாட்டின் கோபுரம் போல வானாளவ உயர்ந்து நிற்கும் கட்டிடங்களையும், இத்தனை துப்புரவாக இருக்கும் சுற்றாடல்களையும் பார்த்து வியந்த வண்ணம் காரில் அமர்ந்து இருந்தாள் சியாமளா. செல்வச்சந்திரன் பெரும்பாலும் மௌனமாகவே காரை ஓட்டிக்கொண்டு இருந்தான். வீடு வந்ததும் உள்ளே அழைத்துச் சென்றான். அது ஒரு சின்ன "அப்பாற்மெண்ட்". ஒரு வரவேற்பறை, ஒரு படுக்கையறை, சிறிய சமையற்கூடம், பாத்ரூம் ரொய்லெற் என அழகாக அடக்கமாக இருந்தது. ஆனால் அறைகள் துப்பரவு இல்லாது பொருட்கள் அங்கும் இங்கும் சிதறி அலங்கோலமாக இருந்தது. இனி இவற்றை எல்லாம் துப்புரவு செய்து கவனிப்பது தன்னுடைய பொறுப்பு என எண்ணிக் கொண்டாள் சியாமளா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பிரயாணத்தால் வந்தது நல்லா களைச்சுப்போய் இருப்பீர் போய் குளிச்சுவிட்டு உடுப்பை மாத்திக்கொண்டு வாரும் சாப்பிடலாம்" என்று அவன் பாத்ரூமை காட்டினான்.

பாத்ரூம் சென்ற அவள் அங்குள்ள கண்ணாடியில் தன் முகத்தை ஒரு தடவை பார்த்துக் கொண்டாள். ஏற்கனவே நிறம் சற்று குறைவு. பிரயாணக் களைப்பாலும் பெற்றோரின் பிரிவுத்துயரத்தாலும் முகம் நன்கு கறுத்து களைத்து இருந்தது. ஆனாலும் அவளின் சுருண்ட தலைமுடியும் பெரியகண்களும் முகத்திற்கு சற்று அழகைக் கொடுத்தன.

"அவரும் சரியான கறுப்புத்தானே, கறுப்பாய் இருந்தாலும் களையாக இருக்கிறார், எனக்குப் பொருத்தமானவர்தான் என் மனதிற்குள் பெருமைப்பட்டுக்கொண்டு குளியலை முடித்துக் கொண்டு வெளியில் வந்தாள். மேசையில் சாப்பாடு ஆயத்தமாகி இருந்தது. சாப்பிட்டதும் உடல் அயற்சியில் படுக்கை அறை சென்று அயர்ந்து தூங்கிவிட்டாள்.

வெளியில் சிரிப்பும் சத்தமும் பலமாகக்கேட்டு கண்விழித்த சியாமளா செல்வச்சந்திரன் தன் நண்பர்களுடன் பேசுவதும் சிரிப்பதும் கேட்டதும் எழுந்து கதவருகில் வந்து அவர்கள் வத்து அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை உற்றுக் கேட்டாள்.

"என்ரா செல்வா பொம்பிளை வந்தால் காட்டாமல் அறையில் பூட்டி வைத்திருக்கிறாய்" என்று ஒருவர், "இல்லையடா பொம்பிளை சரியான கறுப்பு அதுதான் அவன் காட்ட விரும்பவில்லை" என்று இன்னொருவர். தொடர்ந்து, "என்ன செல்வா மெல்லிய வெள்ளைப் பொம்பிளை ஜெர்மன்காரிகள் போல வேணும் என்று சொல்லிக்கொண்டு இருந்தாய் இப்ப எப்படி பொம்பிளை வந்தது? நண்பர்களின் பகிடிக்கும் கேலிக்கும் செல்வச்சந்திரன் மௌனம் சாதிப்பது தெரிந்தது.

சியாமளாவின் நெஞ்சில் வேதனை படர்ந்தது. வெளிநாட்டில் இருக்கும் சனம் அன்பாகவும் பண்பாகவும் இருப்பார்கள் என்று நினைத்துவந்தாள் இது என்ன இவர்களின் பேச்சு அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. படிப்பறிவற்ற பண்பற்றவர்கள் பேசும் பேச்சாகவே அவர்களின் சிரிப்பும் கேலியும் அவளுக்குத் தெரிந்தது.

சியாமளா செல்வனின் ரூமிற்கு வந்தும் ஒருமாதம் ஆகிவிட்டிருந்தது. ஆனால் செல்வன் அவளை எங்கும் வெளியில் அழைத்து செல்வதில்லை. ஏன் அன்பாக ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஏதோ கடமைக்கு செய்வது போல அவனின் செய்கைகள் அவளுக்குப் பட்டது. எவ்வளவு கற்பனைகளை மனதில் கட்டிக்கொண்டு வெளிநாட்டில் வாழ ஆசையுடன் வந்த அவளுக்கு மனவேதனை தாங்காது யாருக்கும் சொல்ல முடியாதநிலையில் மௌனமாக கண்ணீர் சிந்தினாள்.

காலம் யாருக்கும் காத்திராமல் உருண்டோடிக் கொண்டு இருந்தது. மாதங்கள் பல சென்றும் செல்வச்சந்திரன் கல்யாணத்தைப் பற்றி எந்தவித பேச்சோ எண்ணமோ இன்றி இருப்பது சியாமளாவின் மனதிற்கு அச்சத்தையும் வேதனையையும் உண்டுபண்ணியது. பெற்றோர் கடிதம் கண்டு அவர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்விகளுக்கு பதில் எழுதமுடியாத நிலையில் மனம் நொந்து அழுதாள்.

அன்று வழமை போல் சியாமளா இரவுச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுக்கை அறைக்குவர செல்வச்சந்திரனும் வழமைபோல வரவேற்பறையில் படுக்க ஆயத்தமானான். இன்றைக்கு இவரிடம் கதைத்து ஒரு முடிவு எடுத்து விடவேண்டியதுதான், இப்படி எத்தனை நாளைக்குத்தான் சீவிப்பது, நம் கலாச்சாரம் என்ன, பண்பாடு என்ன வெளிநாட்டு வாழ்க்கை என்றாலே பண்பாடு, கலாசாரத்தை மறந்துவிடவேண்டியதுதானோ..... என் கல்யாண விடயம் பற்றி இவர் என்னதான் நினைத்திருக்கிறார் என்பதைக் கேட்டு விடவேண்டியது என்று முடிவு எடுத்த சியாமளா செல்வசந்திரனிடம் துணிவாக "உங்களிடம் கொஞ்சம் கதைக்க வேணும்" என்று சொல்லி விட்டாள். இதை எதிர்பார்த்துக்காத்திருந்தவள் போல் அவன் "என்ன கதைக்கப்போகிறீர், கல்யாணவிஷயம் தானே, அது நடக்காத விஷயம், நீர் வேணுமென்றால் சிலோனுக்குத் திரும்பி போகலாம். அதற்கு நான் எந்த தடையும் சொல்லவில்லை என துணிவாகக் கூறியதைக் கேட்ட சியாமளா நெஞ்சமே வெடித்துவிடும் போல அதிர்ச்சிக்குள்ளானாள். இந்த பதிலை சற்றும் எதிர்பாராத அவள் மீண்டும் துணிச்சலுடன் மேலே பேசத் தொடங்கினாள். "உங்களை நம்பித்தானே என் ஐயா, அம்மா இங்கு அனுப்பினவை, உங்கள் அக்கா குடும்ம்தாரேழ இந்த கல்யாணத்தை எப்படியும் செய்திடவேணும் என்று டோனேசனும் அவை வாங்கனவை, இனி நான் எப்படி ஊருக்கு திரும்பி போவேன் என்று சொல்லி அழத்தொடங்கினாள். பெண்மனம் மென்மனம் என்பது இந்த ஆண்களுக்கு எந்தக்காலத்திலும் புரியாத ஒன்று!

" இந்தா பாரும் அழுது குழறி இங்கே ஒன்றும் நடக்காது. அக்கா அவைதான் இந்தக் கல்யாணம் பேசினவை. பொம்பிளை நல்ல வடிவு என்று எழுதினவை ஆனால் உம்முடைய நிறத்தைப் பற்றி ஒன்றும் எழுதவில்லை. நானும் நினைத்தன் நல்ல வடிவான மெல்லிய பிள்ளையா த்தான் வருவீர் என்று. ஏயர்போர்ட்டில் உமமைக் கண்டவுடனேயே வேறு பொம்பிளை வந்திட்டுதோ என ஏங்கிப்போனன். பிறகு பெயர், ஊர் கேட்ட பின்புதான் நம்பினனான்" என்று நீண்ட "லெக்சர்" அடித்து முடித்தான்.

சியாமளாவிற்கு புரியவில்லை இந்த ஆண்கள் ஏன் இப்படி நிறத்திற்கும் உடலுக்கும் அலைகிறார்கள் என்று. ஒரு பெண் பிடித்த புத்திசாலியாக இருந்தால் ஒரு குடும்பம் நடத்த இதைவிட வேறு என்ன தகுதி வேணும், நிறம், உடலமைப்பு குடும்பம் நடத்துவதில் என்ன பங்கு வகிக்கப் போகிறது, இவ்வளவும் பேசும் அவர் G.C.E.(O/L) கூட பாஸ் செய்யவில்லை என்பது அவள் அறிந்த ஒன்று. ஆண்களுக்கு படிப்பு, நிறம், அழகு எதுவுமே தேவை இல்லை. ஆனால் பெண்களுக்கு மட்டும் ஏன் இந்த பாகுபாடு என மனம் வேதனை அடைந்தாள். பெண்களுக்குத்தான் எவ்வளவு சோதனைகள், வேதனைகள்!

எவ்வளவு ஆண்டுகள் தான் போகட்டும், காலம் எவ்வளவுதான் மாறட்டும் இந்தவகைப்பிரச்சனை ஒருபோதும் ஓயாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படிப் பார்த்தால் யாழ்ப்பாணத்தில் எத்தனையோ பெண்கள் வாழாவெட்டிகள்தான். சியாமளா ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்.

அடுத்தநாள் காலை செல்வச்சந்திரன் நேரத்தோடு வேலைக்குச் சென்றதும் தானும் எழுந்து ஊரில் இருந்து கொண்டுவந்த உடமைகளை தன் பையில் எடுத்துக்கொண்டு அவளும் வீட்டைவிட்டு வெளியேறி விட்டாள். இனி இந்த வீட்டில் ஒரு நிமிடமும் இருக்கக்கூடாது என்பது அவளின் எண்ணம். வெளியில் வந்தபின்புதான் அவளுக்கு யோசனையாகவிருந்தது. அந்த ஊரில் யாரையும் தெரியாது. பாஷையும் புரியாது. வின்ரர் காலம் என்பதினால் பனி பெய்துகொண்டே இருந்தது. சாலை ஓரமெல்லாம் பனிக்குவியல்கள் வெண்பஞ்சு போல குவிந்துகிடந்தது. கால்கள் பனியுள் புதைய கடுங்குளிரையும் பொருட்படுத்தாது மனதை திடப்படுத்திக்கொண்டு கால் போன போக்கில் நடக்கத் தொடங்கினாள்.

வெகுதூரம் சென்றபின் சாலையை கடப்பதிற்கு பச்சைவிளக்குக்காக காத்து நின்ற கும்பலுடன் அவளும் சேர்ந்து நின்று கொண்டாள். அப்பொழுதுதான் பார்த்தாள் அந்தப் பெண்மணியை. பொட்டுவைத்த தமிழ்முகம் புன்சிரிப்புடன் அவளை நோக்கி வருவது தெரிந்தது. அருகே வந்த அந்தப் பெண்மணி சியாமளாவை நோக்கி நீர் தமிழா, யாழ்ப்பாணமா என சுத்த யாழ்ப்பாணத்தமிழில் கேட்டதும் அடக்கிவைத்த துன்பமெல்லாம் அணை கடந்து ஒவென அவளைக் கட்டிக்கொண்டு அழத்தொடங்கிவிட்டாள். "இதிலை நின்று அழாதையும் என்னுடைய வீடு பக்கத்திலைதான் வாரும் வீட்டைப்போய் கதைப்பம்" என அன்பாக அவளை அழைத்துச் சென்றாள்.

நான் மிஸஸ் நந்தகோபால். இங்கு ஜெர்மனியில் 9 வருடமாக இதே ஸ்ரட்டில்தான் இருக்கிறேன். உம்மை இதுவரை நான் கண்டதில்லை. நீர் out of Cityஇல் இருந்து வந்ததோ என அன்பாக விசாரித்தாள். சியாமளா தான் செல்வச்சந்திரனைத் திருமணம் செய்ய வந்த சோகக்கதையை கண்ணீருடன் கூறிமுடித்தாள்.

"நீர் ஒன்றுக்கும் கவலைப்பாடாதையும். இங்கு எனக்கு மூன்று ரூம் இருக்கு. என் கணவர் இங்கு வேலை பார்க்கிறார். இரண்டு பிள்ளைகள், நீர் இப்போதைக்கு எங்களுடன் தங்கலாம், நாளைக்கு ஷோஷலில் போய் கதைத்து உம்மை பதிந்து செய்யவேண்டியவற்றை கவனிப்பம் எனக் கூறினாள். சியாமளாவிற்கு அந்த ஆறுதல் வார்த்தைகள் அருமருந்தாக இருந்தது.

நான்கு ஐந்து மாதமாக அவர்களுடன் ஒன்றாக வசித்த சியாமளா ஜேர்மன் பாஷையையும் படித்து தனியாக வெளியில் சென்று எந்த வேலையையும் செய்யும் ஆற்றலைப்பெற்று ஒரு பெண் தனித்து இந்த பயங்கர உலகில் வாழும் துணிச்சலையும் பெற்றுவிட்டாள். ஷோஷல் ஒவ்வீஸில் தானே சென்று கதைத்து தனக்கென ஒரு அப்பார்ப்மென்ட் கிடைக்கவும் வழிசெய்து எந்தவித பிரச்சனையும் இல்லாது இப்போது அவள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிம்மதியாக வாழ்கிறாள். தன் பெற்றோருக்கும் தன்நிலைமையை அறிவிக்க தவறவில்லை சியாமளா. அவர்கள் எப்படி எல்லாம் கதறி இருப்பார்கள் என்பதை மனக் கண்முன் கூடப்பார்க்க விரும்பவில்லை. தம்பி இளங்கோ இப்போது கண்டி யூனிவேசிற்றியில் படித்துக்கொண்டிருக்கிறான். ஐயா விற்ற தோட்டக்காணிகளை அவர்கள் இன்னும் கூடுதலான பணம் கொடுத்து வாங்கியதுமல்லாமல் சிவப்பிரகாசத்தாரின் வீடு அந்த ஒழுங்கையிலேயே பெரிய கல்வீடாக உயர்ந்து நிமிர்ந்து நிற்கிறது. தனது குடும்பதிற்கென்றே உழைப்பது என்று தீர்மானித்த அவளின் மனதில் இப்போது எந்தவித சலனமும் இல்லை. கல்யாணம் செய்வதில்தான் ஒரு பெண்ணுக்கு இன்பம் என்பது பொய்யென உணர்ந்தாள் சியாமளா. இப்படியான தியாகத்திலும் கூட நிறைவுண்டு.

இப்போதெல்லாம் ஷோஷல் ஒவ்வீஸிற்கு பல தமிழருக்கு அவள்தான் மொழிபெயர்ப்பாளராகப் போகிறார். சிந்தனையை எங்கோ பறக்கவிட்டு கடந்தகால நினைவில் மூழ்கி இருந்தவளை அழைப்புமணி நிகழ்காலத்திற்கு திருப்பியது. எழுந்து சென்று கதவைத் திறந்தவள் அங்கு திருமதி நந்தகோபாலுடன் வயதுவந்த ஜெர்மன் பெண்மணியுடன் நிற்பது தெரிந்தது.

"சியாமளா இவர்தான் நான் சொன்ன அந்த ஜேர்மன் லேடி. இவவிற்கு புருஷனும் இல்லை, பிள்ளைகளும் இல்லை. அவர் யாராவது தமிழர் ஒருவரை தத்து எடுக்க விரும்புகிறார். நான் உமது நிலைமையைச் சொல்ல அவவிற்கு நல்லா பிடித்துப்போயிட்டுது. உமக்கு சம்மதம் என்றால் ஆகவேண்டிய மற்றக்காரியங்களை பார்ப்பதாக அவர் சொல்கிறார்" எனச் சொல்லி முடித்தார் திருமதி நந்தகோபால்.

இன்று தைப்பொங்கல் அதுவுமாக என் பெற்றோரை நினைத்து நான் கவலைப்படுகையில் இப்படி ஒரு சந்தர்ப்பம் எனக்கு கிடைத்திருக்கு. என் பெற்றோரின் கடமையை இப்படி ஒரு வயது போன மூதாட்டிக்கு செய்ய வழிவகுத்த ஆண்டவருக்கு நன்றி சொல்லி தன் பூரண சம்மதத்தை தெரிவிக்கிறாள் சியாமளா.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு விமர்சனம்




பதினெட்டு பெண்களின் ஆக்கங்களைக் கொண்ட "மறையாத மறுபாதி" கவிதைத் தொகுதி அண்மைக்கால இலக்கியத்தின் இரண்டாவது முயற்சி என்பது பதிப்பாசிரியரால் கூறப்பட்டுள்ளது. முதற்தொகுப்பு வாசிக்கும் சந்தர்ப்பம் இதுவரை எனக்கு ஏற்படவில்லை. ஆக இந்த இரண்டாவது தொகுப்பை பற்றி என் பார்வை எவ்வாறு விழுந்திருக்கின்றது என்பதை, உள்ளடக்கத்தை எடுத்துக்கொண்டு கவிதை அமைப்பை விடுத்து, எழுதுகின்றேன்.

கவிதையாளர்கள் பெண்ணடிமை, பெண்விடுதலை, சீதனம், அகதிவாழ்வு, பெண்அகதி, யுத்தம், மனித அகப்புற கொலைகள், வறுமை, போலிசமுதாயக் கோட்பாடுகள், மனித உயிர் பறிக்கும் கொடுமை, ஆணே கலியாண சந்தையில் நிற்கும் முடம் போன்ற சமூகப்பிரச்சினைகளான விடயங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றனர். இன்னும்கூட தமிழ்ப்பெருமையையும், பெண்ணழகையும் வருணிக்கும் கவிதைகளை வாசிக்க நேரிடும் போது, இவர்கள் தொட்டிருக்கும், இந்த தலைபோகிற விடயங்கள் கவிதையில் மிக ஆக்ரோஷத்தோடு, அழுத்தமாக சொல்லப்பட்டிருப்பதை கவனியுங்கள்.

"சடங்கு நாடகத்தில் நீயே
பொம்மையாக்கப்பட்டாய்"

"சாதகங்கள் பார்த்து எங்களை
வைத்தவர்க்கும்
விலை கொடுத்து உம்மை
வாங்கித் தந்தவர்க்கும் நன்றி"

என்ற நிருபாவின் ஏளனம் காட்டியிருக்கும் கவிதை வரிகள் சுட்டிகாட்டியிருக்கின்றன.

**தேவா**

இக்கவிதைகள் பல்வேறு சஞ்சிகைககளில் வெளியிடப்பட்டு இருந்தாலும், ஒரு தொகுப்பில் சேர்த்து வாசிக்கும் போது, கவிஞர்கள் பிரச்சினைகளுக்குத் தந்திருக்கும் ஈடுபாடு, ஆர்வம் நிதானித்து, வாசிப்பவர்களை சிந்தனையில் ஆழ்த்துகின்றது.

நல்லகாலமாய் சீதனமும் தமிழர் பண்பாடு தான் என்று யாரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லவில்லை. சாதகப் பொருத்தம், தாலிகட்டல் போன்றவைகளினால் ஏற்கனவே உணரப்பட்டிருக்கும் சங்கடங்கள் சீதனப்பிரச்சினையையும் அடிப்படையாக வைத்தே பெண்களை மேலும் மோசமான நிலைமைக்கு தள்ளிவைத்திருக்கின்றது என்பதை பாமினியின்,

"விலைகளை நிறுத்தி
விருப்புகளுக்கு
இனியாவது
முதலிடம் கொடு " எனும்

கவிதையும்,

"உயிர்தப்ப வேண்டுமானால்
ஊரை விட்டு ஓடுவோம்
ஆனால் விலைகொடுத்து
வாங்கியவனுடன் மட்டும்
ஓட நான் தயாரில்லை"

என்று உமையாள் சபதமிடுவதன் கவிதைப்பாங்கும் நன்கு செயல்பட்டிருக்கின்றது.

கோசல்யாவின் கேள்விக்கணை தொடுக்கும் கவிதையில்,

"கொட்டிலில
நிற்கும் கடாவுக்கும்.........?
நான் கடா.... நீ?

நிறுத்தி யோசிக்க வைக்கும் இடங்கள்.

சமூகத்தில் ஊறித் திளைத்துப் போன வேண்டாத தீமைகளை இவர்கள் இடித்துக்காட்டும்போது கவிதைகள் ஆயுதங்களாய் மாறியிருக்கின்றன. அநியாயங்களை எதிர்த்து போராடுவோம் சகோதரிகளே! என விழிக்கும் இ.வசந்தி

"காலசக்கரத்தில்
கண்காட்சிசாலையில்
தலையாட்டும் பொம்மையாய்
வேண்டாம்" என்று

உரத்து வாதிடுகின்றாள்.

இப்படிப் பல சிறப்பான கவிதைகளை சொல்லிக் கொண்டே போகலாம்.

பாரதி எப்போதோ சொல்லிவிட்ட பல விடயங்களை நாம் இன்னும் திருப்பி, திருப்பி சொல்ல வேண்டியிருக்கிறதன் அவசியத்தை பெண்கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் நியாயப்படுத்தியிருக்கின்றனர். பெண்களாய் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதும், அதுவும் புகலிடத்திலே இருந்துகொண்டு அவலப்படுவதும், அகதிப் பெண்ணாய் அல்லாடுவதையும் பிரியதர்சினி,

"காட்சிப் பொருளென
முகத்திலிருந்து
பாதங்கள் வரைக்கும்
என்னை பல
கண்கள் அளக்கும்"

எனக் கூறுவதும், சத்தியா, மல்லிகாவும் தங்கள் கவிதை வரிகளில் இவற்றை உணர்த்துவதும் தெளிவாக்கப்பட்டிருக்கின்றது.

மல்லிகாவும், ஜெயந்தியும் தங்கள் கவிதைகளில் இன்னொரு வகையான தடயங்களை தொட்டிருக்கின்றனர். யுத்தத்திற்கு எதிராக இவர்கள் கொடுக்கும் குரல்- தாய்மையின் உறுதியான கட்டளைகளாக ஒலிக்கின்றது.

"ஒவ்வொரு பிள்ளையின்
நரம்பிலும் ஓடுவது
பெண்களின் இரத்தம்
எனவே, நான் சொல்கிறேன்
யுத்தங்களை நிறுத்துங்கள்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று கூறும் மல்லிகாவின் கவிதைகள் சிறப்பானவை.

ஜெயந்தியின்,

"அயல் வீட்டில் மரணம்

ஆனால்.... இப்போ.....

சுடலைக் குருவியும், நாயும், காகமும்

கலைக்காமல் கத்தும்

நாளாந்தம் துக்குறிதான்"

கவிதையும் யுத்தத்தின் அவலத்தை குறிக்கின்றது.

இக்கவிதைத் தொகுப்பின் சிறப்புகளை எடுத்துக் கொள்ளும் போது, சில குறைகளையும் நோக்கவேண்டியுள்ளது. மல்லிகாவின் ஒரு கவிதை மட்டும் ஆங்கில மூலம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. மற்றைய இரண்டின் ஆங்கில மூலங்களை காணோம். வேற்று மொழி கவிஞனுக்கும், வாசகனுக்கும் இந்த சந்தர்ப்பங்களை சிறிய வாயில் மூலம் தமிழ் இலக்கிய கவிதைகளை அறிமுகப்படுத்தி இருக்கலாம்.

இந்த வெளியீட்டில் ஒரு அவசரம் இருந்திருக்கின்றது. பக்கங்கள் சிரத்தையில்லாமல் கட்டப்பட்டிருப்பதும், படிக்க உபயோகிக்கும்போதுரு எங்கே ஒற்றைகள் பிரிந்துவிடுமோ என்று யோசிக்க வைத்திருக்கின்றது.

சாம்சனின் அட்டைப்படம் கவிதைகளின் உள்ளார்ந்த வெளிப்பாட்டை சித்தரிக்கின்றது. இக்கவிதைத் தொகுப்பு மறுபதிப்பில் வெளியாகும் போது கனதியாகவும், பாதுகாத்து வைத்திருக்கக்கூடிய முறையிலும் இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கவிதையிலும், அதன் முடிவிலும் பிரச்சினைகளுக்கான தீர்வை, போராட்ட உணர்வை வெளிப்படுத்தி இருக்கின்றன.

இது புதுக்கவிதைகளுக்கே சொந்தமான பாணியா?

இலக்கியம் என்பது பிரச்சினையின் தீர்வை கோடிட்டு காட்டித்தான் உயிர் பெற வேண்டுமா அல்லது பிரச்சினைகளை அவிழ்த்து முன்வைப்பது இலக்கியத்தின் நோக்கமா....

---


## மறையாத மறுபாதி

வெளியீடு:புகலிடக் கருத்து இலக்கியம்

அனைத்து தொடர்புகட்கும்:

**EXIL,**
**27 RUE JEAN MOULIN,**
**92400 COURBEVOIE,**
**FRANCE.**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலை உணவு



பிரெஞ்சுமூலம்: ஜாக் பிறவேர் தமிழில்: க.கலாமோகன்.

கிண்ணத்துள்
அவன் கோப்பியை ஊற்றினான்
கோப்பிக் கிண்ணத்துள்
அவன் பாலை விட்டான்
பால் கோப்பிக்குள்
அவன் சீனியைப் போட்டான்
சின்னக் கரண்டியினால்
அவன் கலக்கினான்
அவன் பால்கோப்பியைக் குடித்தான்.
அவன் கிண்ணத்தை அப்படியே கிடக்கவிட்டான்
என்னோடு பேசாமல்
அவன் ஒரு சிகரெட்டைப்
பற்றவைத்துக் கொண்டான்
புகையைக் கொண்டு
அவன் வட்டங்கள் செய்தான்
சாம்பல் தட்டத்தில்
அவன் சாம்பல்களைத் தட்டினான்
என்னோடு பேசாமல்
என்னைப் பார்க்காமல்
அவன் எழுந்தான்
தனது தலையில், தனது தொப்பியை
அவன் போட்டான்
தனது மழைக்கோட்டை
அவன் அணிந்தான்
ஏனெனில் மழை பெய்துகொண்டிருந்தது
ஒரு வார்த்தையுமின்றி
என்னைப் பார்க்காமல்
மழையில்
அவன் வெளியே போனான்
எனது தலையை, எனது கைகளினால்
நான் பிடித்துக் கொண்டேன்.
அத்தோடு நான் அழுதேன்.

பிரஸ்தாப கவிதை கே.எல்.சிவகுமாரனினாலும் மொழி பெயர்க்கப்பட்டு "அலை"யில் பிரசுரமானது என்பது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net



# அசுரன் செத்த நேரம் சில குறிப்புக்கள்: சுகன்

இரவுமல்லாத பகலுமல்லாத நேரத்தில் தனக்கு மரணம் வேண்டுமென ஓர் அசுரன் வரம் கேட்க, பொழுது படும் நேரத்தில் அவனைத் தட்டியதாக புராணவரலாறு ஒன்று உளது.

இந்தப் பொழுதுபடும் நேரம் ஒரு அந்தரமான நேரம்.

பகல் - அதற்குரிய ஆர்ப்பாரிப்புகளுடனும் அவசரங்களுடனும் விரைவில் கழிந்துவிடும். -இரவு- எந்த அட்டகாசங்களுக்கும் இடம் கொடாது. பொழுதுபடும் நேரம்- எந்த பற்றற்ற மனிதனையும் தன்னைப்பற்றி சிந்திக்கவும் தடுமாறவும், பரிதவிக்கவும் ஏங்கவும் வைக்கின்ற பொழுது. - அதனால்தான் கேட்டவனுக்கும் அப்பொழுதில் மரணத்தைப் பற்றி நினைக்கவும் முடியவில்லை.

தட்டிறவனுக்கும் அது "ஈசி"யாக இருந்தது.

எமது சமூகத்தில் யுத்த காலகட்டம் தொடங்கி ஒரு தலைமுறைக்குக் கிட்டத்தட்ட வந்தாயிற்று- அதனது கொலை வெறிமுகம் எல்லோருக்கும் அத்துப்படி. அதனால் இன்னார் இன்னார்தான் பாதிக்கப்பட்டார்கள் என்று அடையாள அணிவகுப்பு நடத்தும் அவசிய தேவை யாருக்கும் இல்லை- "துவக்குள்ளவன்" "துவக்கில்லாதவன்" என்ற இன்றைய பிரதான சமூக முரண்பாட்டில் எல்லோர் முகத்திலும் மரண பீதி- சாக்களை அப்பி ஒட்டியிருக்கிறது.

"துவக்கில்லாத கடைசி மனிதன் பொது எதிரி" என்பது இங்கு மிகை எளிமைப்படுத்தலும் மிகை வியாக்கியானமுமாகும்.

தெய்வீகமும் சாந்தமும் கருணையும் கொண்ட எமக்கு முந்திய தலைமுறையின் தொடர் வேர்களை நாம் எப்போதோ விட்டுவிட்டோம்.

தொப்புள் கொடியோடு அறுத்துவிட்டோம் என்று பச்சைப்படிய தெரிகிறது. ஒரு பேச்சுக்கு மனிதாபிமான இயக்கத்தின் தேவை பற்றி கதைப்பதற்கு ஒரு கணம் விரும்பினால் " உங்களை குட்டி முதலாளித்துவ மாயையிலிருந்து விடுவிக்க வேணும்" என்று திருப்பி அடிக்கின்ற கண்றாவியை அண்மையில் படிக்க நேர்ந்தது. "பேய்க்குப் படித்தால் தாயிலைதான்

www.tamilarangam.net

ஏவிப்பாககயது" வழமை. முயலுக்கு மூணுகால் மட்டுமில்லை முப்பது கொட்டையும் இருக்கு என்று தொடரும் சிறுபிள்ளைத்தனமான யுத்த நியாயப்படுத்தல்களுக்கு எதிரான இந்த தாய்மை "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்ற தனது முது மொழியை மீண்டும் நிறுவவேண்டும்.

Madame பிரான்சுவாஸ் இரண்டாம் உலக யுத்த காலத்தில் பிறந்தவர். என்னுடன் வேலை செய்பவர். "யுத்தகாலத்தில் நீங்கள் பட்ட கஷ்ரங்கள் ஏதாவது நினைவிற்கு வருகிறதா?" என எனது பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ்- மூன்றறக் கலந்த "மொழிப்பிரவாளத்தில்" தட்டித்தட்டிக் கேட்டபோது தான் வீட்டில்தான் பிறந்ததாகவும் அனேகமான தாய்மா பிரசவத்தின்போது இறந்ததாகத் தான் கேள்விப்பட்டதாகவும் சொன்னதோடு "உங்களுடைய இந்தியா நாட்டில் இன்னமும் வீடுகளில்தானே பெறுகிறார்கள்? " எனக் கேட்டார். நானும் தட்டித்தட்டி "அவர்கள் ‘ஆதிகாலத்திலிருந்தே ‘ வீடுகளில்தான் சுகமாக பெற்றுவருவதாக" பிரான்சுவாஸிடம் கூறியபோது "நீ ஒரு ஆண் - உனக்கு இதைப்பற்றி விளங்கிக் கொள்ள ஏலாது" என்று எனக்கு திருப்பித் தந்தார். பிரான்சுவாஸின் முகத்தைப் பார்க்க வெட்கமாகவும் கூச்சமாகவும் இருந்தது எனக்கு. யுத்தங்கள் எல்லாம் அனேகமாக ஆண்களால்தான் நடாத்தப்படுவதால் பெறுபவளுக்குத்தான் தெரியும் பிள்ளையின் கஷ்ரம் என்பதும் பெறுபவளால் மட்டும்தான் அதனைப் பூரணமாக விளங்கிக் கொள்ளவும் முடிகிறது. எனது சகோதரியையும் குழந்தையையும் அண்மையில் பிரசவத்தின் போது பறிகொடுத்ததை மறந்துவிட்ட நினைவு மீண்டும் கிளறப்பட்டு வருத்திக் கொண்டுள்ளது.

"அஞ்சு பெடியளைப் பெத்தும் நான் ஆண்டியாத்தான் இருக்கிறேன் அறுதலி மக்களே! நான் சாகப்போறேன், காசு அனுப்புங்கோடா!"- என்று எனது மாமனார் தன் மகன்களுக்கு எழுதிய கடிதம் அகதிகள் ஆவணத்திற்காக என்னிடம் உண்டு- அகதிகள் ஆவணத்திற்கு அதிகம் சேராது. கொழும்பு வரைக்கும் தூளும் மீன் பொரியலும், வீபூதிப் பக்கற்றும்.

"இந்திய வரலாறு" என்ற இந்தியப்புத்தகம் நடுவில் பாஸ்போட் அளவிற்கு அதை ஒளித்துவைக்க வெட்டப்பட்ட அழகுடன்.

சில இலங்கை, இந்திய ரூபாய்கள்- பாரிஸ் வரைக்கும்.

எனது அண்ணரிடம் 20 ரூபாய் இலங்கைத்தாள்காசு போன கிழமை வரைக்கும் இருந்தது. என்னுடன் வேலைசெய்யும் "ஸ்தெவ்" தான் எல்லா நாட்டு காசும் சேர்ப்பதாகவும், சிறீலங்கா காசு உன்னட்டை இருந்தா தாறியா? என கேட்டபோது அண்ணரின் காசு உடனே நினைவிற்கு வந்தது.

அண்ணரிடம் கேட்டபோது- "நான் திரும்பிப் போகையுக்கை எயாப் போட்டிலையிருந்து அங்காலை பஸ்ஸிற்கு வைச்சிருக்கிறன், உன்னட்டை தந்துபோட்டு நான் என்ன செய்யிறது-?" என்று வேண்டா வெறுப்பாக தந்தார்.

இருந்த இருபது ரூபாவும் போவிட்டுது- இனி என்னத்தைப் போறது-?

டாங்கு டுக்குடு டுக்குடு டுக்குடு

www.tamilarangam.net

டாங்கு டுக்குடு டுக்குடு டுக்குடு
டாங்கு டாங்கு டாங்கு டாங்கு


"ஆச்சி செத்ததும் நல்லது நல்லது
அப்பு செத்ததும் நல்லது நல்லது
நாஹும் பெண்டிலும் தின்போம்- தின்போம்......"

- என்று மரணவீட்டின் பறை ஒலிக்கு சமூக "வரகவி" ஒருவன் வைத்த விமர்சனம் பசுமரத்து ஆணியாக இன்னுமென் நெஞ்சில். இயற்கை மரணங்களையே சகித்துக்கொள்ளாத அந்த வரகவி எப்போதோ தொலைந்தான். பறைமேளம் அடிப்பது போராட்டத்திற்கு எதிரான விமர்சனமாகக் கருதப்படுவதால் மேளமும் போச்சு- அவனது அன்றாட பிழைப்பும் போச்சு -

அவனது உணவை ஆணும் பெண்ணுமான இரண்டு அதிகாரங்கள் பறித்துக் கொண்டன-

பிறந்து பத்து பதினைஞ்சு நாளுக்குள் குழந்தை அழும் சத்தத்தில்தான் பேய் கதைக்குமாம். பிறந்த பச்சைப்பாலனின் குரலெடுத்து தொலைவில் பேய் ஒன்று அழும் சத்தம் தெளிவாகக் கேட்கிறது-

அடுத்த இதழில் சந்திப்போமா?



www.tamilarangam.net

பாரிஸில் நடைபெற்ற 14ஆவது இலக்கியச்சந்திப்பில் பெண்களது உரிமை பற்றிய விவாதம் மிகவும் சூடாகவேயிருந்தது. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற விவாதத்தில் புகலிடப் பெண்கள் தாம் சந்திக்கும் நெருக்கடிகளை மனம் திறந்து பேசினார்கள். சில தலையீடுகள் விவாதத்தைத் திசைதிருப்பிவிட எத்தனித்தபோதும்- குதர்க்கத்தனம் கொண்ட இந்தத் தலையீடுகள் காத்திரமான அபிப்பிராயங்களால் பலவீனமாக்கப்பட்டன.

## பாரீஸ் இலக்கியச்சந்திப்பில்... பெண்கள் ''பிரச்சனை''

லண்டனில் வாழும் ஆசியப்பெண்களின் மனஉளைச்சலை படமாக எமது கண்ணின்முன் கொண்டுவந்த ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், முதல்நாள் நிகழ்ச்சிகளின் போது தனது "கற்புடைய விபச்சாரி" என்ற சிறுகதைக்காக சற்றே காரமாக விமர்சிக்கப்பட்டிருந்தார். "அரசியல் அடக்குமுறையால் இங்கு வந்த தமிழ் பெண்களிற்கு தமது வாழ்க்கையும் அடக்கப்பட்டிருக்கின்றது என்பது தெரியாமலேயேயுள்ளது" என்றதுடன் மட்டும் நில்லாமல், ஆசியப் பெண்களின் தற்கொலைவிகிதம் லண்டனில் அதிகரித்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

ஒழுக்கம், கற்பு மீதான போதனைகளின் அடிப்படையிலமைந்த யாழ்ப்பாணப் பாரம்பரியம் புகலிடத்திலும் கட்டிக்காக்கப்படுகின்றது என்றார் ஜெயந்தி சாம்ஸன். பெண்கள் இரண்டாம் பட்சமாகவே நடாத்தப்படுகின்றனர், வீடுகளில் இவர்களுக்கு இரட்டைச் சுமையுள்ளது என்பதை அழுத்தமாகவே சொன்னார்.

ஐரோப்பாவில் வாழும் பெண்களிற்கு ஏன் பாலியல்கல்வி அவசியம் என்பதை வலியுறுத்திய லஷ்மியின் கருத்துக்கு ஒப்பான ஒரு கருத்தே பேராசிரியர் பத்மமனோகரனிடமிருந்து வந்தது. "எமக்கு எமது உடல் பற்றியே தெரியாமல் உள்ளது. பிரச்சனைகளை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்" என இவர் சொன்னார்.

"பிரச்சனைகளிற்குரிய தீர்வு வர்க்கப்பார்வைக்கூடாகவே வரும்" என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரதி, "பெண்கள் அமைப்பிலிருந்து வருவதெல்லாம் கோஷங்களே" யென்று விமர்சித்தார்.

இந்தக் கட்டத்தில் தலையிட்ட யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரான மு.நித்தியானந்தன் "வர்க்கப் பிரச்சனை உற்பத்தி உறவுகளிலிருந்து எழுகின்றது. பெண், ஆண் என்ற ஒடுக்குமுறை பாலியலிலிருந்து எழுகின்றது. கறுப்பர் வெள்ளையர் என்ற முரண்பாடு நிறத்திலிருந்து வருகின்றது. வர்க்கம், பெண்கள் என்ற இரண்டு பிரச்சனையையும் ஒரு பிரச்சனையாக்கமுடியாது. கூலி உழைப்பு மீதான மார்க்ஸினது ஆய்வில் ஆண்களின் உழைப்பு மட்டுமே கவனத்துக்கு எடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் வீட்டிலே செய்யும் வேலையை மார்க்ஸ் ஆய்வுக்கு எடுக்கவில்லை. புதிய மார்க்ஸிஸ்ட்டுகள் இதனை ஆய்வு செய்கின்றனர்" எனச் சொன்னார். வீட்டுவேலைகளை அதிகம் செய்பவர்கள் பெண்களே எனக் குறிப்பிட்டார் மல்லிகா.

பெண்கள் தமது பிரச்சனைகளைப் பகிரங்கமாகச் சொல்லவேண்டும் என்ற கருத்துக்கு அதிக அழுத்தம் கொடுத்த நிருபா, புகலிடத்தில் தமக்குதவும் அமைப்புகள் உள்ளனவென்பதைப் பெண்கள் அறியாதுள்ளனர் எனக் குறிப்பிட்டவேளையில், "ஆண்களும் வீட்டுவேலைகளைச் செய்கின்றனர். அவர்களை முழுக்கமுழுக்கக் குற்றம்சாட்டமுடியாது" என்றார் மோகன். "சமர்" சஞ்சிகையின் ஆசிரியர்குழுவில் ஒருவரான ரஜாகரன் பக்கத்திலிருந்து எழுந்த வர்க்கவாதம் விவாதத்தின் அமைதியான ஓட்டத்தைக் குழப்பியதென்பதுதான் பொருத்தம்.

"எங்களுடன் சேர்ந்து எங்களது பிரச்சனையை அணுகுங்கள்" என ஆண்களிடம் வேண்டுகோள் விடுத்த றஞ்சனி பெண்கள் பிரச்சனை சிரிப்பாக எடுக்கும் விஷயமல்லவென்றும் மார்க்ஸிஸம், வர்க்கம் பேசுபவர்களின் வீடுகளில்கூட பெண்கள் மோசமாகவே நடாத்தப்படுகின்றனர் என்றார்.

"புதுமை" சஞ்சிகையின் ஆசிரியரான பாரதிதாஸன் வர்க்கவாதத்தால் அனைத்துக்கும் தீர்வுசொல்லிக்கொண்டிருந்தவர்களைச் சுட்டிக்காட்டி "இந்த மார்க்ஸிஸ்டுகளிடமிருந்துதான் பெண்ணுரிமைக்கு எதிரான கருத்துக்கள் வருகின்றன. இவர்களிடமிருந்துதான் மார்க்ஸிசத்தை முதலில் காப்பாற்றவேண்டும். இவர்கள் சமயவாதிகள். மார்க்ஸிஸத்தைப் படுகுழிக்குள் கொண்டு செல்பவர்கள். இவர்கள் புத்தகம் எழுதுவது மனிதனின் சிந்தனையை மாற்றுவதற்காகவேயொழிய புரட்சி செய்வதற்காகவல்ல. நாம் ஆணாகப் பிறந்தோம் என்பதல்ல, ஆனால் ஆண்களாக வளர்க்கப்பட்டோம் என்பதே பிரச்சனை. உயிரியல் ரீதியாக ஆணை மாற்றமுடியாதெனில் அது ஆபத்தாகத்தானிருக்கும்" எனத் தெரிவித்த கருத்து பலத்த கரகோஷத்தால் ஆதரிக்கப்பட்டது.

"பெண்களின் உணர்வுகளை மதிக்கவேண்டும்" எனச் சொன்ன உமா, "வீட்டுக்குள்ளே தமது பெண்களைப் பூட்டிவைத்துவிட்டு இங்கே ஆண்கள் வர்க்கம் பற்றி பேசுதல் இலகுவானதுதான்" என்றதுடன் மட்டும் நில்லாமல், "



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களாகிய நாம் அமைப்பொன்று தொடங்குவோம். அங்கே மூன்றுபேர் சேர்வர். அவர்களுக்கு மத்தியிலும் பிரச்சனைகள் வந்துவிடும்" என்றார்.

"பெண்ணினத்தின் விடுதலைக்கு ஆண்களின் ஒத்துழைப்பும் தேவை" என நாதன் சொன்ன வேளையில், வர்க்கப்பிரச்சனை தான் பெண்ணினத்தின் விடுதலைக்குரிய தீர்வு என்ற போதும், பெண்களின் தற்காலிகப் பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும்" என்றார் ஓவியர் தேவதாஸன். "புகலிடத்தில் வாழும் அகதிகளாகிய எமக்கு எவ்வளவோ பிரச்சினைகள் உள்ளன. பெண்ணயிருப்பதும் ஒரு பிரச்சனைதான்" என்றார் இன்பா.

பெண்ணுரிமைக்காக போராடிய பெண்கள் திருமணத்தின் பின்னர் முற்றுமுழுதாக மாறிவிடுவதையிட்டுக் கவலை தெரிவித்த அழகிரி, பழகிய பெண்கள் கூட கலியாணத்தின் பின்னர் சிரிக்காது விடுவதைச் சுட்டிக்காட்டினார்.

பலத்த விவாதங்களுடன் சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சனை "புகலிடத்தில் பெண்கள்" என்ற நிகழ்ச்சியிலிருந்து தொடங்கியதாகும். எது எபபடியிருப்பினும், பெண்ணுரிமை மீது நடாத்தப்பட்ட இந்த விவாதத்தை ஆரோக்கியமானதென்று சொல்லுதல் மிகப் பொருத்தமானது.

**ஜனா சுகிர்தன்**


**அறிமுகம்**

## பெண்கள் சந்திப்பு மலர்

*வெளியீடு: 2*

*விலை: 5.00டி.எம்.*

*நீங்கள் 5.80 டி.எம். பெறுமதியான முத்திரைகளை கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.*
*சகல தொடர்புகட்கும்:*

"PENNKALCHANTHIPPU MALAR",
FRAUEN TREFFEN,
OVERWEG STR.31,
4690 HERNE 1,
GERMANY.

**ஊதா**

*ஒரு வருடத்திற்கு மூன்று இதழ்கள் வெளிவரும்.*


*சந்தா: 15 டி.எம்*

*சகல தொடர்புகட்கும்:*

"OOTHA",
ALLER WELT HAUS
POTTHOF STR.22,
5800 HAGEN 1,
GERMANY.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்





வயல் வெளியில் நெல்லுவெட்ட சென்று
வான வெளிகளில் பட்டம் விட்டு மகிழ்ந்தோம்
புயல் காற்று வீசியபோதும்
புல் அறுத்து வந்தோம்
பூவரச மரத்து குழைகளை யெல்லாம் தின்றது
எங்கள் வீட்டு வெள்ளை ஆடு.....

பனையோலை வெட்டி வார்ந்து
பச்சை ஈர்க்கை புறம்பெடுத்து
கலையாமல் கட்டு கட்டாக
கவலையில்லாது தின்றது கறுப்பிமாடு......

வீரமான வீமன் நாயும்
சீறும் எங்கள் சிவப்பு பூனையும்
முற்றத்து தோட்டத்தில்
சுற்றி சுற்றி விளையாடின

நாட்டில் வந்த கலகத்தால்
நாம் பிறந்த மண்ணைவிட்டு
நாடிவந்தோம் மேலைநாடு
நாதியற்ற அகதிகளாக

என்ன அற்புதம்! இங்கேயும்
சேர்ந்து விளையாடின பூனையும் நாயும்
பகிர்ந்து தின்றன ஆடும் மாடும்
பறந்து திரிந்தன கிளியும் புறாவும்

பறவை மிருகத்தினுள் பாகுபாடில்லை
பரந்த உலகில் பகுத்தறிவு ஜீவிக்குள்
கருத்துவேறுபாடுகள் பாகுபாடுகள்....
நிரந்தரமற்ற ஜீவனென்பதை


www.tamilarangam.net


உணர்ந்ததில்லை மனிதன் என்றும்

கறுப்பென்றும் சிவப்பென்றும்
கருத்தில்லா வேறுபாடு

கறுப்பு படைப்பில்
ஆண்டவன் துரோகியா.....?
வெள்ளை படைப்பில்
ஆண்டவன் விவேகியா.....?
எது எப்படி இருப்பினும்
கறுப்பு மனிதன் கவலையின் இருப்பிடம் !
வெள்ளை மனிதன் வெற்றியின் முதலிடம் !

**-சுகந்தினி அமிர்தலிங்கம்.**






மறுநாள் விடிகையில் உயிருடன் இருப்போமா அல்லது இரவோடிரவாக எரித்துக் கொல்லப்படுவோமா அல்லது வீதிக்குச் சென்றால் மீண்டும் வீடு சேர்வோமா என்ற பயங்கலந்த நிச்சயமற்ற வாழ்வினையே மேற்குஜேர்மனியில் அகதிகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தொடர்ச்சியாக "ஹோயேர்வேர்டா", "ரோஸ்டொக், கோட்புஸ்"," மோல்யூன்" இன்னும் பல நகரங்களிலும், தமது சொந்த நாடுகளில் நிலவும் யுத்த நிலமைகளிலிருந்து தம்மைத் தப்பித்துக் கொள்ள மேற்குஜேர்மனியில் தஞ்சம் கோரியிருந்த ஆயிரக்கணக்கான அப்பாவி அகதிகளும், இரண்டாம் உலக யுத்தத்தின் பின் அழிந்து போயிருந்த மேற்கு ஜேர்மனியை மறு சீரமைக்க மற்றைய நாடுகளிலிருந்து அழைக்கப்பட்டதைத் தொடர்ந்து வேலைவாய்ப்புகளுக்காக இங்கு வாழும் வெளிநாட்டவர்களும் நாஸிகளின் இனவாதத்தாக்குதல்களுக்கு பலியாகியிருக்கின்றனர்.

ஜேர்மனியில் நாளாந்தம் 5லிருந்து 10வரையிலான அகதிமுகாம்கள் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்தத்தாக்குதல்களிலிருந்து தம்மைப் எவ்வாறு பாதுகாத்துக்கொள்வதென அறியாத அகதிகளின் வாழ்வில் நீங்கமுடியாத இருளே சூழ்ந்திருக்கின்றது. பொலிஸாரும்,முதலாளித்துவ இனவாத அரசியல்வாதிகளும் இத்தாக்குதல்களில் தொடர்ந்தும் அசிரத்தையே காட்டிகொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக ஜேர்மன் அண்மைய வரலாற்றின் கறைபடிந்த தினமாக கருதப்படும் ஒகஸ்ட் 25ம் திகதி "ரோஸ்டொக்" எனும் நகரில் நடந்த

www.tamilarangam.net



அகதிமுகாமிலிருந்து அகதிகளை வெளியேறும்படி நிர்ப்பந்தித்து நடைபெற்ற கோரத்தாக்குதலின்போது அப்பிரதேசத்தில் ஆட்சியிலிருக்கும் கிறிஸ்தவ ஜனநாயக கட்சியினரும், பொலிஸாரும் அந்நிகழ்வை முக்கியப்படுத்தாது அலட்சியப்படுத்தினர். அதன்பின்பு 200க்கு மேற்பட்ட ஆயுதந்தாங்கிய நாஸிகளை எதிரக்க 6 பொலிஸினர் மட்டுமே கடமையிலமர்த்தப்பட்டனர். இந்நிகழ்விற்குப் பின் நடாத்தப்பட்ட கைதுகளில் 60 வீதமானோர் இவ்வகதிகளுக்கு உதவிசெய்ய வந்த நாஸிசஎதிர்ப்புவாதிகளே கைது செய்யப்பட்டனர். ஆனால், இந்நிகழ்வைக் கண்டித்து 29ம் திகதி நடாத்தப்பட்ட ஊர்வலத்தைக் கட்டுப்படுத்த 3,000 பொலிஸார் வந்திருந்ததோடு 90 பேரை கைதும் செய்தனர்.

இத்தாக்குதல்களின் அடிப்படையில் கைது செய்யப்படுபவர்கள் 1 மாதத்திற்குள் விடுதலை செய்யப்படுகிறார்கள் அல்லாது தகுந்த சாட்சியங்கள் இல்லையெனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்டுகின்றனர்.

இனவாத முதலாளித்துவ அரசியல்வாதிகளும், பொலிஸ் அதிகாரிகள் மட்டுமல்ல, இந்தப் புறக்கணிப்புகளும் தஞ்சம் கோரும் உரிமையை யாப்பிலிருந்து அகற்றுமாறு மேற்கொள்ளப்படும் பிரச்சாரத்தை ஆதரிக்கும் ஒரு குறிப்பிட்ட அரசியல் நோக்கத்தையே கொண்டிருக்கின்றது. இந்த இனவாத அலை அரசாங்கத்திற்கு மற்றைய பிரச்சனைளை திசை திருப்புவதற்கு பெரிதும் உதவிபுரிகிறது. இத்தகைய வெறித் தாக்குதல்களை நடாத்தும் சிறிய இனவாதக்குழுக்கள் இருக்கும்வரை குறிப்பாக 16வது சட்டத்தை அகற்றுமாறு கோருவது போன்ற முதலாளித்துவ கொள்கைகளுக்கு அமுக்கம் கொடுக்கும் சக்தியாகவே இயங்கிக்கொண்டிருக்கும்.

CDU, CSU போன்ற கட்சிகள் தமது தேர்தல் பிரச்சாரமாக "தஞ்சம் கோருவதை கட்டுப்படுத்தலை"யே வைத்திருக்கின்றன. இம்முறையில் இவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டவர்கள் தான் இப்போது இவர்களது கட்டுப்பாட்டையும் மீறி பயங்கர நாஸிக்குழுக்களாக வளர்ச்சிப்பெற்று இவர்களால் உருவாக்கப்பட்டிருக்கும் இனவாதச் சூழலை பாவிப்பதை தொடர்ச்சியான தாக்குதல்கள் எமக்கு காட்டுகின்றன. 1930களில் நிலவிய நாஸிகளின் ஆட்சி வீழ்ச்சிற்குப் பின் தற்போது மீண்டும் ஜேர்மன் அரசியலில் பயங்கரவாதத்தினூடாக தமது செல்வாக்கை செலுத்த ஆரம்பித்திருக்கின்றனர்.

www.tamilarangam.net

இவ்வளர்ச்சியைத் தொடர்ந்து ஆதரித்தால், இதன் விளைவாக ஒரு புறமாக உருவாகும் இனவாதத்திற்கு எதிரான குழுக்களின் வளர்ச்சியும் ஆளும் வர்க்கத்தை பயங்கொள்ள வைத்திருக்கின்றது. இம்முறையிற்தான் தற்போது இவர்களால் மேற்கொள்ளப்படும் "வலதுசாரிகளினதும், இடதுசாரிகளினதும் வன்முறை" என்ற பிரச்சாரம் விளங்குகின்றது. அதாவது இவர்கள் ஒரு சுதந்திரமான பயங்கரவாத தாக்குதல்களையே கொள்கையாகக் கொண்ட நாஸிச அமைப்பின் வளர்ச்சியையோ அல்லது குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட நாஸிஸ எதிர்ப்புவாதத்தைக் கொண்ட

இடதுசாரிகளின் வளர்ச்சியையோ விரும்பவில்லை.

ஆளும் கட்சிகள் மட்டுமல்ல, முக்கியமான எதிர்க்கட்சிகளும் இந்தக் கொள்கையையே அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன. எதிர்க்கட்சியான S.P.D, ரோஸ்டோக் நிகழ்வுகள் நடைபெற்ற தினத்தன்றே ஜேர்மன் அரசியல் யாப்பிலிருந்து தஞ்சம் கோரும் உரிமையை கோரும் சட்டத்தை நீக்குவதை ஆதரித்து அதை நடைமுறைப்படுத்த தேவையான 2/3 பெரும்பான்மை வாக்குகளை அளித்து தன்னை நன்றாக இனங்காட்டியுள்ளது. அது மட்டுமல்ல, C.D.U, S.P.D ஆகிய கட்சிகளின் பாதுகாப்புத்துறை அனுபவஸ்தர்கள், 1,000லிருந்து 2,000வரையிலான அங்கத்தவர்களைக் கொண்ட பலம்பொருந்திய விசேட பொலிஸ்சேவையை உருவாக்குவதற்கு அழைப்புவிடுத்திருக்கின்றனர். இவர்களது முக்கிய குறிக்கோள் இடதுசாரிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதகவேயிருக்கும்.

வெளியுலக அரசியல் அரங்குகளில் முக்கிய பங்கை வகிக்கும் ஜேர்மனியை இந்த இனவாத எழுச்சி பெரிதும் பாதிக்கின்றது. உலகிற்கு தாம்



இனவாதிகள் அல்ல என்பதைக் காட்டவேண்டிய தேவை இன்று ஜேர்மன் அரசாங்கத்தின் தலையில் வீழ்ந்துள்ளது. அந்த அவப் பெயரை புனிதப்படுத்தவும், தமது நாட்டில்"ஜனநாயகம்" உள்ளதென்பதை காப்பாற்றிக் கொள்வதற்காகவும் நடாத்தப்பட்ட நாடகமே நவம்பர் 9ம் திகதி ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் சேர்ந்து நடாத்திய ஊர்வலம். பெரும்பான்மையான ஜேர்மனியர்கள் வெளிநாட்டவர்கள் வெளியேறுவதை ஆதரித்தாலும், அதேநேரத்தில் பயங்காரவாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாஸித்தை விரும்பவில்லை என்பதையே இந்த ஊர்வலத்தில் பங்குகொண்ட மக்கள்திரள் காட்டுகின்றது. ஹிட்லரின் ஆட்சியின் பின்பு கட்டியமைக்கப்பட்ட ஜனநாயகத்தைக் குலைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்ற கருத்துப்படும் விளம்பரவுரைகளை தொலைக்காட்சிச்சேவைகள் தமது முக்கிய நிகழ்ச்சிகளுக்குப் பின்பு ஒலிபரப்புகின்றனர். தற்போது, பிச்சையெடுப்பவர்கள், விபச்சாரம் செய்பவரகள் (குறிப்பாக "Dresden"நகரில்) மற்றும் அகதிகளுக்கு எதிரான மக்கள் வீதிப்போராட்டங்களுக்கு நாஸிகளால் கிழக்கு ஜேர்மன் எல்லைகளில் அத்திவாரமிடப்பட்டுள்ளன.

மேற்குஜேர்மனியில் நாஸிஸக் கட்சிகளை ஆதரிப்பவர்களாக மத்தியதரவர்க்கத்தை சேர்ந்தவர்களாகவேயிருக்கின்றனர். ஆனால் கிழக்கு ஜேர்மன் பகுதிகளில் வீதியில் வாழ்பவர்கள், பாடசாலை மாணவர்கள் போன்றோர் பெரும்பாலும் அங்கம் வகிக்கின்றனர். இந்நாஸிஸக் குழுக்கள் அரசாங்கத்தின் தஞ்சத்திற்கெதிரான பிரச்சாரத்திலிருந்து பல நன்மைகளைப் பெற்று தங்களது பங்களிப்பாக இனவாதச் சூழலை உருவாக்கியுள்ளனர். இந்நிலமைகள் கிழக்கு- மேற்கு ஜேர்மன் இணைவிற்குப்பின் ஜேர்மன் பொருளாதாரத்தின், ( குறிப்பாக கிழக்கு ஜேர்மன்) வீழ்ச்சியினதும் , அதை மறைக்க அரசாங்கம் மேற்கொண்ட " அகதிகளின் வருகை" என்ற பிரச்சாரத்தினதும் எதிரொலிகளே.

1990ம் கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும்ம் இணைந்த போது சந்தை பொருளாதாரம் , கிழக்கு ஜேர்மனியிலுள்ள அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வாக அமையுமென நம்பப்பட்டது. அதன்விளைவு எவ்வாறு இருக்குமென தெட்டத்தெளிவாகத் தெரிந்திருந்தாலும், பத்திரிகைகளும், அரசுத்தரப்பினரும் மூடிமறைத்தனர்.

கிழக்கு ஜேர்மனியின் பொருளாதாரம் முற்றிலும் சீரழிந்த நிலமையிலேயே தற்போது உள்ளது. உலகத்தின் பத்தாவது பெரிய தொழில்மயப்படுத்தப்பட்ட நாடகவிருந்தது. ஒரு வருடத்திற்கிடையில் அரைவாசியாக விழுந்துள்ளது. தொழிற்உற்பதி மூன்றில் ஒரு பங்காக குறைந்துள்ளது.

இவையொன்றும் 40வருட சோசலிச பொருளாதாரத்தின் தவறான நிர்வாகத்தின் விளைவுகள் அல்ல, இவையாவும் மேற்குஜேர்மன் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவுவுகளே. 3 வீதமாக கிழக்கு ஜேர்மன் பொருளாதாரம் வளர்வதற்கு குறைந்தது 2060 ஆண்டுவரை



www.tamilarangam.net



ஆகுமென நம்பப்படுகின்றது. மேற்கு ஜேர்மனுடன் ஒப்பிடுகையில், கிழக்கு ஜேர்மன் பொருளாதாரம் அரைவாசியாகவேயிருந்தது. உழைப்புஉற்பத்தியை வைத்து பார்த்தாலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடொன்று பொருளாதாரக்கூட்டை அல்லது உலகச்சந்தையை அடைவதற்கு நீண்டகாலமெடுக்குமென நம்பப்படுகின்றது. 1991ம் ஆண்டு தொழில்உற்பத்தி 40%மாக வீழ்ச்சியடைந்தது. இதனை கிழக்குஜேர்மன் பொருளாதாரத்தை நவீனபடுத்தல் மூலமாககவே தவிர்த்திருக்கலாமெனவும், அதற்கு 300 பில்லியன் மார்க்குகள் தேவைபட்டிருக்குமெனவும் நம்பப்படுகின்றது.

தொழிற்சாலைகளை முதலாளிகளுக்கு விற்பதனால் சில பிரச்சினைகளைத்தவிர அபிவிருத்தியடைந்த புதியதொழிற்ந்தாபனங்களாலும், மேலதிகமான மூலதனத்தாலும் மில்லியன் கணக்கான வேலைகள் உருவாக்கப்படுமென அனைவரும் கனவு கண்டனர். இந்தவகையில் "டிரோய்ஹாண்ட் நிறுவனம்" அனைத்து அதிக செல்வத்தை உற்பத்திசெய்யும் சொத்துகளையும் தனது கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்தது.

இதில் சில்லறை வியாபாரம், வங்கிகள், ஹோட்டல்கள், 4.1மில்லியன் தொழிலாளர்கள் இதில் அடக்கம். 40 வருட காலமாக இச்செல்வத்தை உற்பத்தி செய்தவர்களுக்கு எந்தவித நஷ்டஈடும் கொடுக்கப்பாடாதே இந்நடவடிக்கை நடாத்தப்பட்டது. அன்றிலிருந்து பல ஸ்தாபனங்கள் விற்கப்பட்டோ, மூடப்பட்டோ, அல்லது தேக்கநிலையிலேயோ வைக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை "டிரோய்ஹாண்ட் நிறுவனம்" 1 மில்லியனுக்கும் குறைந்தளவினருக்கே வேலைவாய்ப்பளித்துள்ளது. பத்தில் ஒரு வீதமானவரே தனியார் துறையில் வேலைபார்க்கின்றனர். விவசாயமும் முன்னம் இருந்ததைவிட மூன்றில் ஒரு வீதமாக விழ்ச்சியடைந்துள்ளது.

பொருளாதார வீழ்ச்சி மக்களின் வாழ்க்கைத்தரத்தில் இன்னும் பிரதிபலிக்க ஆரம்பிக்கவில்லை. அவர்களின் உண்மையான வருமானம் 20% மாக உயர்த்தப்பட்டுள்ளது. இவர்களின் வாழ்க்கைத்தரம் மேற்கு ஜேர்மனியர்களின் வாழ்க்கைத்தரத்திற்கு வருவதிற்கு 1995 வரை நீடிக்கும். பழைய வேலைகளை வைத்திருப்பவர்களும், ஓய்வுபெற்றவர்களும் இதனால் நன்மையடையலாம்.45% மான மேற்கு ஜேர்மன் சம்பளத்தையே

www.tamilarangam.net


பெறுகின்றனர். சிறிதளவினரே மாதம் 1,500 மார்க்குகள் அளவில் மாதம் ஒய்வூதியம் பெறுகின்றனர்.

ஒய்வூதியத்தை நம்பியோ, அல்லது வேலையற்றோருக்கான நிதியை நம்பி வாழ்பவர்களுக்கு ஒரு நிச்சயமற்ற எதிர்காலமே காத்திருக்கின்றது. அவர்களின் கடந்தகால வருமானத்தை வைத்தே அவர்களின் ஒய்வூதியத்தொகைக் கணிக்கப்படும். ஆனால் அவர்களது ஒய்வூதியமும், வேலையற்றோருக்கான நிதியும் பொதுவான ஜேர்மன் வரிகளையே சந்திக்கவுள்ளது. எதிர்காலத்தில் 2/3 வீதமான கிழக்கு ஜேர்மனியர்கள் முழுமையாகவோ, அல்லது பகுதியாகவோ சமூகஉதவிப் பணத்திலேயே வாழவேண்டிய நிலையேற்படும். வட்டிவிகிதமும், வாடகையும் அதிகரிக்கும், இந்த நிலமைகளினால் அரசாங்கத்தின் சமூக செலவுகள் வெகுவாகக் குறைக்கப்படும்.

எதிர்காலத்தில் அனைத்து கிழக்கு ஜேர்மன் தொழிற் சாலைகளும் மேற்கு ஜேர்மன் தொழிற்சாலைகளின் கிளைகளாவே இயங்குமெனவும், கிழக்குஜேர்மனி மேற்கு ஜேர்மனியில் தங்கிவாழ வேண்டியநிலையேற்படுமெனவும் நம்பப்படுகின்றது. ஜேர்மன் சமூகம் தொழில் உள்ளவர்கள் தொழில் அற்றவர்கள் என்ற இரு பெரும் பிரிவுகளைக் கொண்டதாகவிருக்கும்.

இப் பொருளாதார வீழ்ச்சி ஜேர்மன் மக்களை இன்னும் மேலும் விரக்திக்குள்ளாக்கும். இப்பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாத அரசாங்கம் அகதிகளைத் தொடர்ந்தும் பலிகடாக்கள் ஆக்கும் துர்ப்பாக்கியமே நிகழப்போகின்றது. வளர்ந்துவரும் பாசிச எதிர்ப்புக் குழுக்கள் ஓர்நம்பிக்கையளித்தாலும், ஒரு பெரும்பான்மையைக் கொண்ட ஓர் சக்திக்கெதிராக போராடும் பலத்தைப் பெற்றிருக்குமா என்பது கேள்விக்குறியே.

: மீரா





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# இறுதியில் எஞ்சியிருப்பது

விளக்கு இல்லை
வெளிக்கிடக் கேற்றும் இல்லை
வளவைச் சுற்றி
உழக்கித் திரியும்
இராணுவச் சாப்பாத்துக்களின் ஓசை.

எடுத்த எடுப்பில்
எங்கும் ஓடமுடியாது
மட்டக்களப்பு
நிலத்து வாழ்க்கை அப்படி
எதிர்ப்படுபவையெல்லாம்
எமக்கு
எதிரியாக்கியாயிற்று

ஒரு நாள்
உயிருக்கு அடைக்கலம் தந்த
உதுமா லெப்பை கூட
இன்று
அதைப் பறிக்கும்
பகையாளி
ஆக்கப் பட்டு விட்டான்.



அமெரிக்கனை விட
நமக்கு
அடுத்தாற் போல் வாழும்
அயலவன் அவசியம் இல்லையா?
இந்த
அரிவரித்தனம் கூடப் புரியாத
ஆதர்சகர்கள் தான்
நமக்குத் தலைமையானால்
இவர்கள் யார்?
இதற்கு மேலும் இங்கு
விளக்கங்கள் எதற்கு

விடுங்கள்
நாம்
உலகத்தின்
அடுக்காமைகளுக்கு எல்லாம்
அடித்தளம் ஆக்கப்பட்டு விட்டோம்
அகிலமே நமக்காய்
இரக்கப்படும் நிலை
இல்லாது ஆக்கப்பட்டாயிற்று
மிஞ்சி இருப்பது
தாளும் துவக்கும் தான்.

குயிலன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களும் உடல்நலமும்

பெண்களின் சுகாதாரத்தின் முக்கியத்துவம் மிகவும் அரிதாகவே கவனத்தில் எடுக்கப்படுகின்றது. இதற்கான காரணம் யாதெனில் பெண்கள் ஆண்களைவிட குறைந்தவர்களாகவே கணிக்கப்படுவதாலும், பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறை இயல்பாகவே அவளது அனைத்து அடிப்படைத் தேவைகளைப் போல சுகாதாரத்தையும் அவளுக்கு மறுக்கின்றது.

ஆண்களினால் பிரயோகிக்கப்படும் ஆதிக்கம் பெண்களது உடலியல் ரீதியான வரையறைகளை சுரண்டுவதாலேயே இவ்வொடுக்குமுறை சாத்தியப்படுவதோடு, இது பெண்களை அவர்கள் வாழ்க்கைத் துணைகளாக இருப்பதை விடுத்து, வீட்டுக்குள் அடங்கி வாழும் வேலைக்காரிகளாக இருக்கவேண்டிய நிலைக்குத் தள்ளுகின்றது. இவ்வாணாதிக்கம் அவர்களுக்குத் தேவையான சுகாதார ரீதியான கவனிப்புகளையும், வசதிகளையும் வேண்டிநிற்கின்றது. ஆனால் இவ்வாறு இருப்பது தவறாகும். ஏனென்றால் ஆண்களும், பெண்களும் இணைந்து தான் மனிதஇனம். வெவ்வேறு பாத்திரங்களைக் கொண்ட சமமான துணைகளாகவிருப்பதால் இருபாலருக்கும் எல்லாவிடயத்திலும் முக்கியமாக சுகாதாரத்தில் ஒரேவிதமான கவனிப்பே வழங்கப்படவேண்டும்.

மிகவும் சிரமமானதும், ஆனால் மகத்தானதுமான குழந்தைகளை பெறுவதும், வளர்ப்பதுமான பாத்திரத்தை வகிப்பதால் பெண்கள் மனித இனத்தின் தொடர்ச்சிக்காக பங்களிக்கின்றார்கள். ஆகவே அவர்கள் உடல்நிலை முக்கிய கவனத்திலெடுக்கப்படவேண்டும்.

## மல்லிகா

பெண்கள் தாமாகவே இதை உணரவேண்டும். ஒரு பெண் மனைவியாகவும், தாயாகவும் முழு குடும்பத்திற்கும் உணவளிக்கின்றாள். இந்நடைமுறையில் அவள் முதலில் கணவனுக்கு, இரண்டாவதாக அதிகமாக மகன்மாருக்கும், பின் மகள்மாருக்கும் இறுதியாகவே தனக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறாள். இது இயல்பான பழக்கமாகிவிட்டது. எப்போதும் அவளுக்கு, அதாவது தாயிற்கு. மிகுதியாகவுள்ள உணவே கிடைக்கின்றது.

குடும்ப வருமானத்திற்கு உழைப்பவர் ஆதலால் கணவன்மாருக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இந்த விடயத்தில் பெண்கள் அதிலும் முக்கியமான பாத்திரமான வீட்டைக் கவனித்தல், பிள்ளைகளை வளர்த்தல், துவைத்தல்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமையல், துப்பரவு செய்தல் போன்றவற்றை செய்கின்றாள் என்பதை மறக்கின்றனர். இக்கடமைகள் அரிதாகவே வேலைகள் என கருதப்படுகிற்ன்றது. பெண்களின் பங்களிப்பு இல்லாது ஆண்கள் வேலைக்கு போகவோ அல்லது உயிர்வாழவோ முடியாது. ஆண்களுக்கு உழைப்பதற்கு அவசியமான சக்தியைப் போலவே, பெண்களுக்கும் முழு குடும்பத்தையும் கவனிப்பதற்காக சக்தி தேவைப்படுகின்றது. அவர்களது குறைந்த முக்கியத்துவம் கொடுக்கப்படக்கூடாது.

பொதுவாக பெண்கள் கணவனுக்காக உணவைத் தயாரிப்பதிலும், பின் தனக்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்காது சிறந்த பகுதியை அவனுக்கு பரிமாறுவதிலுமே அதிகம் கவனமெடுக்கிறாள். இச்செயலால் பெண்கள் மதிப்பு குறைந்தவர்கள், அவர்களுக்கு குறைந்த முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டுமென்ற நோக்கத்திற்கு பங்களிக்கின்றார்கள்.

சிறுவயதிலிருந்தே பெண்கள் தங்களுக்கான சீதனத்தை உழைத்து தருபவர்களாதலால் தந்தையிடமும், சகோதரர்களிடமும் தங்கி வாழ்கின்றார்கள். இந்தக் கருத்தினால் மற்றவர்களள் தங்களுக்காக வருந்துகிறார்கள், சேமிக்கின்றார்கள் என்று உணரும் நிலமைக்கு தள்ளப்படுகின்றார்கள். அதன்பின்பு தம் கணவனாக வரும் ஆண்களுக்கும், மகன்மாருக்குமாக தங்கள் வாழ்வை அர்ப்பணிக்கிறார்கள். பின்னர் இதுவொரு பழக்கமாக வருவதோடு, தங்கள் உடல்நிலை பற்றிய கவனிப்புக்களை தியாகம் செய்துவிட்டு தங்கள் மகள்மாருக்காகச் சேமிக்கிறார்கள். வீட்டு வேலைகளினால் களைப்படைவதனாலும் தமக்காக விசேட கவனம் எடுக்க வேண்டியதில்லை என நினைப்பதாலும் தங்கள் உடல்நிலையை புறக்கணிக்கிறார்கள். ஆதலினால் கிடைப்பவற்றை உண்டு உயிர் வாழவேண்டுமென்பதற்காக வாழ்கிறார்கள்.

சத்துமிகுந்த உணவு, தேவையானளவு நித்திரை, தூய்மையான காற்று, ஓய்வு போன்றன ஆணானலும், பெண்ணானாலும் உடல் ஆரோக்கியத்திற்கு அத்தியவசியமாகின்றது. ஊட்டச்சத்துக்கள், கல்சியம், கனிப்பொருட்கள் போன்றன பெண்ணின் உடலிற்கு அவசியம் தேவை. பொதுவாக பெண்கள் புறக்கணிப்பதுவும், அவளுக்கு தேவையானதுவுமான பால், முட்டை, பழங்கள் போன்றன அவள் கர்ப்பிணியாக அல்லது நோயாளியாக இருக்கும் சமயங்கள் தவிர்ந்த ஏனைய வேளைகளில் அதிகமான வீடுகளில் ஆண்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது. சிலசமயங்களில் ஆர்வக்குறைவு, கவனமின்மை, வீட்டின் பொருளாதார நிலமை என்பவற்றால் அவள் நோயாளியாகவோ, கர்ப்பிணியாகவோ இருந்தாலும் அவளுக்கு இவை மறுக்கப்படுகின்றன. இத்தகைய நிலமைகள் ஏற்படும் பட்சத்திலும் அதிகமான ஆண்கள் தமது மதுப்பழக்கத்தையோ, புகைபிடிப்பதையோ மற்றைய பொழுதுபோக்கு அம்சங்களையோ விட்டுக் கொடுப்பதில்லை.

கர்ப்பிணியாகவிருக்கும் போது அவளுக்கு வழங்கப்படவேண்டிய பராமறிப்பு

www.tamilarangam.net

ஒரு பெண்ணின் உடல்நிலையில் பிரதான பங்கினை வகிக்கின்றது. கர்ப்பமாகவிருக்கும் போது ஏற்படும் போசாக்கின்மையும், அத்தியவசிய தேவைகளின் புறக்கணிப்பும் பெண் இறப்பிற்கான முக்கிய காரணங்களாகின்றன.

குழந்தைகளைப் பேறு என்பது கவனமாக திட்டமிட வேண்டியதொன்றாகும்.

கர்ப்பிணியாக இருக்கும்வேளையில் உருவாகும் கல்சியக்குறைபாடு தாயிற்கும், சேயிற்கும் தீங்கினை விளைவிப்பதோடு, பிற்பாடு தாய் , எலும்பு, பற்கள், தலைமயிர் போன்றவற்றில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். நோய்வாய்ப்பட்ட தாய்மார்கள் பெறும் குழந்தைகள் அதிகமாக ஆரோக்கியம் குன்றியவர்களாகவே இருக்கிறார்கள்.

போதுமான நித்திரை பெண்களுக்கு அதிமுக்கியமாகின்றது. ஏனென்றால் இறந்தகசிவிழையங்கள் நித்திரையின் போதுதான் மீளமைக்கப்படுவதோடு, அவையங்களை சீரான நிலையையும் அடைகின்றன. வேலையிலிருந்து வரும் ஆண்கள், நாள் முழுவதும் குழந்தைகளைப் பராமறிப்பதும் வீட்டுவேலைகளைச் செய்வதுமாகவிருக்கும் பெண்களைப் பற்றி சற்றும் சிந்தியாமல் தாம் களைப்பாகவிருப்பதாகக் கூறி ஒய்வெடுக்கிறார்கள். பெண்களும் மனிதப்பிறவிகளாகக் கருதப்படல்வேண்டும்.

நாளாந்தம் அடுப்படியிலேயே பொழுதைக் கழிக்க வேண்டிய கட்டாயம் பெண்களுக்கிருப்பதால், சமையலின் போது வெளியாகும் புகையினை உட்கொள்ளும் அபாயம் அவர்களுக்கு நேரிடுகிறது. இது பலவிதமான விளைவுகளை உருவாக்குகின்றது. ஆபத்து நிறைந்த நோய்களை தமக்குள் மறைத்து வைத்து எந்தவித வைத்திய ஆலோசனைகளையும் பெறாமல் கடுமை நிலையை அடையும் வரை வீட்டிற்குள்ளே முடங்கியிருக்கிறார்கள். நிச்சயமாக மேற்கொள்ளப்படவேண்டிய வருடாந்த வைத்திய பரிசோதனைகளை தவறவிடாது செய்யவதன் மூலம் புற்றுநோய் போன்ற நோய்களைத் தவிர்க்கும் சந்தர்ப்பங்களும் பெண்களுக்கு கிட்டலாம்.

பொதுவாக ஆண்கள் மேலதிக செயற்பாடுகளாக விளையாட்டு, இசை, மற்றும் உல்லாசபயணங்களில் தம்மை ஈடுபடுத்துகின்றனர். பெரும்பாலும் பெண்கள் இத்தகைய நடவடிக்கைகளிலிருந்து ஒதுக்கியே வைக்கப்பட்டிருக்கிறார்கள். பெண்களுக்கும் பொழுதுபோக்கு அம்சங்களின் ஈடுபாடு அவசியம் தேவை. வேலை அழுத்தத்தினால் பெண்கள் உயர் இரத்த அழுத்தம், பாரிசவாதம், வயிற்றுப்புண், நரம்புத்தளர்ச்சி போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டு துன்புறுகிறார்கள். பிள்ளைகளைப் பராமறித்தல், வீட்டு வேலைகள் முதலிய வேலைகள் இருப்பதால் அவர்களுக்கு விளையாட்டு மற்றும் வெளிப்புற நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்த நேரம் கிடைப்பதில்லை. வீட்டிலேயே பெண்கள் இலகுவாக செய்யக்கூடிய உடற்பயிற்சிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறையவே உள்ளன. இது அவர்கள் வீட்டிலேயே முடங்கி இருக்க வேண்டுமென்பதை வெளிப்படுத்தவில்லை. நாங்கள், பெண்களும் எங்களுக்கு என்ன தேவையென்பதை உணரவேண்டும். எமது உடல் பற்றிய முடிவுகளை நாமே எடுத்து, நம் உடல் மீதும், சுகாதாரம் மீதும் அதிகாரம் செலுத்துபவர்களுக்கெதிராக நாம் போராடவேண்டும். எமது சமஉரிமைக்காக போராடும் அதேவேளை நாம் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமென்பதையும் வலியுறுத்துவோம்.

மனித இனத்திற்கே உயிர் கொடுக்கும் பெண்களுக்கு அதிக முக்கியத்துவத்துவம் அளிக்கப்படவேண்டுமென்பதோடு, அவளது சுகாதாரத்தை பாதுகாக்கும்படி எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படல்வேண்டும்.

ஓ! நீ சிறியவனே !!



# சூழல் மாசுபடல்

கண்களின் முன் மண்ணில்
தொலைத்த வாழ்வை
விண்ணில் மண்தேடிப் பறந்த
எங்களின் கால்கள்
விண்ணையும் சாடாமல்
மண்ணையும் சாடாமல்
சுற்றித் திரிந்தனவே

இருளுக்குள் கண்மூடி
மெல்ல அழுவோம்
வலிகண்ட பொழுதினிலே
சிரித்ததை மறுப்போம்
மரணம் விழ வாழ்வை ஏங்குவோம்

கனவுகள் சுமந்து
கனவுகள் தின்னும்
வாழ்வைத் தொலைத்த கதை
எமக்கு நாமே சொல்லுவோம்.



ராகுலன்

www.tamilarangam.net



# விரியும் எல்லைகள்

## காளிதாசன்

மீண்டும் ஈராக்கின் மீது ஆக்கிரமிப்பு யுத்தம் ஆரம்பித்துவிட்டது. விமானங்கள் குண்டுகளைப் பொழிந்த வண்ணமிருக்கின்றன. இரத்த வெள்ளத்தில் சடலங்கள் பச்சிளங்குழந்தைகள் என்றுமில்லாமல் கோரநிகழ்வுகள்.

அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிறுவ எந்தக் கொலைபாதகச் செயல்களுக்கோ இரக்கமற்ற யுத்தங்களுக்கோ சற்றும் தயங்காத ஜோர்ப் புஷ் தனது பதவிக்காலம் முடிவடையும் இறுதிநேரத்தில் எடுத்துள்ள சில முடிவுகளை அமெரிக்காவின் வருங்கால வெளிநாட்டுக் கொள்கையை வரையறுத்துத் தீர்மானிப்பவையாக உள்ளன. சோமாலியாவிலும் ஈராக்கிலும் புஷ் மேற்கொண்ட நடவடிக்கைகள் காட்டுவது அமெரிக்கா தனது ஆதிக்க எல்லைகளை அகலமாக்கி விட்டிருக்கிறது என்பதைத்தான்.

முதன் முறையாக வலதுசாரியல்லாத (கம்யூனிஸ எதிர்ப்பற்ற) அரசை பாதுகாப்பதற்காகப் படைகளை அனுப்புகிறோம், இம்முறை நாம் செல்வது அமெரிக்காவின் பொருளாதார நலன்களுக்காக இல்லை, மக்களின் பட்டினியைப் போக்கவே நாம் அங்கு போகிறோம் என்ற பிரச்சாரங்களுடன் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வருங்கால கிளின்டன் நிர்வாகத்தில் நடைபெறப்போகும் ஆக்கிரமிப்புகள் நியாயப்படுத்தப்படுவதற்கு நிறைய காரணங்களை வெளியுலகிற்கு சொல்லப்படப்போவதைக் காட்டுகின்றது. உலகநாடுகளின் வறுமைக்கும் பட்டினிக்கும் முக்கிய காரணியாக இருந்து வரும் அமெரிக்கா பட்டினி போக்கவே போகின்றோம் என்ற காரணத்தைச் சொல்லிக்கொண்டு போவதற்கு உலகில் நிறைய நாடுகள் உள்ளன.

பட்டினிக்காக சோமாலியாவிற்கு படைகளை இறக்கிவிட்டால் இதே காரணங்களிற்காக ஏன் பொஸ்னியாவில் இறக்கக்கூடாது அங்கு போகலாமென்றால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன் குருதிஸ்தானில் ஆக்கிரமிக்ககூடாது ஆங்கே ஒமென்றால் ஹைட்டி அதன் பிறகு கியூபா அதன் பின்பு இந்தியா என்று புஸ் அகலமாக்கியுள்ள ஆதிக்க எல்லைகளை கிளின்டன் நிர்வாகம் பட்டினி, மனித உரிமை மீறல், மனிதாபிமான உதவி, ஜனநாயகத்தை மீளக்கட்டுதல் போன்ற சாட்டுகளுடன் மேலும் அகலமாக்கும் வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன.

சோவியத் யூனியனின் உடைவு, கிழக்கைரோப்பிய "சோசலிச" நாடுகளின் வீழ்ச்சி மற்றும் கியூபா இந்தியா போன்ற நாடுகளின் பலவீனமான நிலை போன்றவற்றால் இன்று முன்னரைப் போல அமெரிக்காவிற்கெதிரான வலிய சவால்கள் இல்லை. தட்டிக் கேட்க ஆளில்லாத துணிவில் மேலும் சண்டியனாகிக் கொண்டிருக்கிறது. தங்களது மூலோபாயத்தையும் வெளிநாட்டுக் கொள்கையையுங் காரணங்காட்டி ஈராக் ஆக்கிரமிப்பின்போது மேற்குநாடுகளின் கூட்டை அமெரிக்கா உருவாக்கியதும், தற்போது சோமாலியா ஆக்கிரமிப்பின்போது கொள்கையைக் காரணங்காட்டி இந்த நாடுகளுடன் கூட்டாக இணைந்துள்ளதும் வெளியுலகில் தனது ஆக்கிரமிப்பி எதிர்க்குரல் எழும் போது தான் மட்டுமல்ல இவர்களுந்தான் என்று தப்பிக்கொள்ளவும் முகங்கொடுக்கவுமே என்று மேற்கு நாட்டு அரசு சார்பு பத்திரிகைகளும், அரசியல் அவதானிகளும் அமெரிக்காவைக் கண்டித்து வருகின்றன.

சமீபத்தைய ஆக்கிரமிப்புக்களின்போது ஜோர்ஜ் புஸ் சொன்னவற்றைக் கேட்கும் போது ஆத்திரம் தான் வருகிறது. "இந்த நடவடிக்கைகளை எடுக்கும் இந்த நேரத்தில் அமெரிக்காவினால் மாத்திரம் தான் உலகின் தவறுகளையெல்லாம் சரியாக்க முடியுமென்று நான் சொல்லவரவில்லை, ஆனால் உலகின் சில பிரச்சனைகளை அமெரிக்காவின் தலையீடில்லாமல் தீர்க்கமுடியாதென்பதையும் நாம் விளங்கவேண்டும் . எனவே உலகநாடுகளின் சமூகத்திற்கு அமெரிக்காவின் நடவடிக்கைகள் பிரச்சனை தீர்க்கும் கருவியாக உள்ளது என்பதே உண்மை. அமெரிக்காவே இன்று உலகில் தனித்த மாபெரும் சக்தியாக (Super Power) விளங்குவதால் நாடுகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவவேண்டிய தேவை வரும்போது அமெரிக்காவின் நடவடிக்கைகள் மாத்திரமே பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்விற்கும் சாவிற்குமுள்ள வித்தியாசத்தில் பெறுமதிமிக்கனவாக உள்ளனவென்பதையும், உதவ வேண்டிய எமது கடமையையும் நாம் மறந்துவிடக்கூடாது. சோமாலியாவிற்கு நாம் செல்வது எமது அரசியல், இராணுவ, பொருளாதார தேவைகளுக்காகவல்ல, மக்களின் துயரந்தான் காரணம்" என்னே கருணை என்னே கடமையுணர்வு. முன்னரென்றால் சண்டை என்று கேள்விப்படுமுன் படைகளுடன் போயிறங்கிக் "காப்பாற்றினார்". இன்று பசியென்றறிந்தவுடன் இராணுவத்தை அனுப்புகிறார். இவரல்லவா கலியுகத்து ஆபத்காந்தவன், புண்ணியமூர்த்தி.


உலகின் மொத்த சனத்தொகையில் 6 % பங்கேயேகொண்டிருக்கும் அமெரிக்கா உலகமூலவளத்தின் 20 வீதத்தினை நுகர்கிறது. அமெரிக்காவின்

www.tamilarangam.net

நலன்களுக்காக பொழியும் குண்டுகளில் பச்சிளங்குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்காணோர் இரத்தம் சிந்தி மடிகின்றனர். இவற்றையா இவர் மக்களிற்கான பெறுமதிமிக்க நடவடிக்கைகள் என்கிறார். சமீபத்திய ரியோடி ஜனரோவில் நடைபெற்ற உலகச் சுற்றாடல் பற்றிய மகாநாட்டின் போது அமெரிக்காவின் மூலவள நுகர்ச்சியில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டுமென்று கேட்கப்பட்டபோது அமெரிக்காவின் வாழ்க்கைமுறை பற்றிய விவாதத்திற்கு நான் தயாரில்லை என்று மறுத்த இந்த புஸ் கணவான்தான் உலக வறுமையைப் பற்றிக் கதைக்கிறார். இவன் இப்படிக் கதைக்கும் போது இவர்களது ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு சரியான சக்திகளோ மக்களின் போராட்டங்களோ பலமாக இல்லையென்பதுவும் அவற்றைச் செய்ய முடியாமல் மூன்றாமுலக நாடுகளின் மக்கள் தமக்குள்ளான குறுகிய குத்துவெட்டுகளுடனேயே சீரழிந்து போயுள்ளார்கள் என்பதைப் பார்க்கும்போது தவிர்க்கமுடியாமல் கவலைவருகிறது.

தனது தேர்தல் வாக்குறுதிகளின்போது விழுந்துள்ள அமெரிக்காவின் உள்நாட்டுப் பொருளாதாரத்தை எழுப்பிவடுவதே தனது பணியாகவிருக்கும் என்று கூறிய கிளின்டன், ஒருபுறம் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளை நியாயப்படுத்திக்கொண்டு இதனால் பாதிக்கப்படும் உள்நாட்டு பொருளாதாரத்தை மறைப்பதற்கு இரட்டைவேடம் போட்டுத் திண்டாடும் நிலை வரலாம். புதிய கணவானே உமது அனைத்து முகமூடிகளையும் எடுத்து வையும்.

வியாட்நாமில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கெதிரான போராட்டங்களில் பங்குகொண்டதோடு, அரசியலில் பிரவேசித்தவர் பில் கிளின்டன். இன்று சோமாலியாவில் ஈராக்கில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புகளுடன் தனது ஜனாதிபதிப் பதவியை ஆரம்பிக்கிறார். வறியநாடுகளைச் சுரண்டுவதாலும் மக்களின் இரத்தத்தினாலும் உயிர் வாழும் அமைப்பைக் காட்டிக் காக்கும் ஆட்சியமைப்பிற்கு யார் தலைமை தாங்கினாலும், இலட்சனக் கணக்கானோரின் குருதிக்கும் வியர்வைக்கும் வறுமைக்கும் முன் அவர்கள் பில் கிளின்டன் ஆனால் என்ன எந்த அகிம்சா மூர்த்தி ஆனால் என்ன பதில் சொல்ல வேண்டிய மனித குல விரோதிகளே





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜெர்மன் மொழியும் சிறுகதைகளும்

ந.சுசீந்திரன்

ஆங்கில, ரஷ்ய, பிரெஞ்சு மொழிப் படைப்பாளிகளைப் போல ஜெர்மன் மொழிப் படைப்பாளிகளை தமிழ் இலக்கிய உலகம் அறிந்திருக்க நியாயமில்லை. ஜெர்மன் மொழிப் படைப்பாளிகளின் எவ்வளவு ஆக்கங்கள் தமிழில் வெளிவந்திருக்கிறது என்பதை நாம் இன்னும் எண்ணி விடலாம் போலிருக்கிறது.

Goethe இன் Faust,ஜெர்மன் மொழிக் காப்பியமான நிபலுங்கன் கதை( Nibelungen),Franz kafka வின் சில கதைகள், Heinrich Heine, Erich Fried இன் கவிதைகள்,Bertold Brecht இன் சில நாடகங்கள் Siegfried Lenz அவர்களின் "நிரபராதிகள் காலம்" என்பவற்றோடு இன்று மேலும் Heinrich Böll, Wolfgang Borchert என்று தமிழில் நேரில் வாசிக்கக் கூடியதாகவும், மேலும்

Herrmann Hesse, Thomas Mann, Ernst Bloch ,Musil, Martin Heidegger, Siegmund Freud, என்று பல்துறைசார்ந்தவர்களின் ஆக்கங்களும் ஆங்கிலம் வழி மொழி பெயர்ப்புகளாகவே தமிழுக்குக் கிடைத்துள்ளன.ஆங்கிலம் தெரிந்த புத்திஜீவிகள் இன்னும் பலதைப் படித்திருப்பார்கள் என்று எதிர் பார்க்கலாம்.

தமிழ் இலக்கியத்தின் சிறுகதை வரலாற்றில் ஆங்கில, ரஷ்ய, பிரெஞ்சு மொழிப் படைப்புக்களின் தாக்கம் அளவிற்கு ஜெர்மன் மொழிப்படைப்புக்கள் இருக்கவில்லை. ஆகக் கூடியது வ.வே.சு ஐயர், க.நா.சு(க.நா. சுப்பிரமணியம்) அல்லது புதுமைப் பித்தன் போன்ற சிலர் ஜெர்மன் மொழிச் சிறுகதைகளைத் தேடி வாசித்தும்,மொழிபெயர்த்தும்,தழுவியும் எழுதியிருக்கின்றனர் அல்லது ஒருகணிப்பீட்டுக்காக மட்டும் வாசித்திருக்கின்றனர். அதேவேளை உலக சிறுகதை வரலாறே எழுபது அல்லது எண்பது வருடங்கள் தான் என்று கொண்டால் அதன் வளர்ச்சிப்போக்கில் ஏனையமொழிகளில் இருந்த ஒரு Maupassant,O.Henry,Anton Tschekou போன்று உலகப் புகழ் பெற்ற சிறுகதை ஆசிரியர்களை ஜெர்மன் மொழியில் காணமுடியவில்லை.

சிறுகதை என்ற வடிவத்திற்கு இலக்கிய அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்பாகவே - அதனோடு ஒப்பிடக் கூடிய பல்வேறு இலக்கிய வடிவங்கள் ஏற்கனவே ஜெர்மன் மொழியில் இருந்த போதும் ஜெர்மன் சிறுகதை வரலாறு அண்மையிற்தான் தொடங்குகின்றது .இங்கிலாந்தில் ஆங்கில எழுத்தாளர்கள் Thomas Hardy,Henry James,James Joyce, R.L Stevenson போன்றவர்கள் நாவல் மூலம் புகழ்பெற்றமையும் இங்கே ஜெர்மனியில் Thomas Mann, Henrich Mann, Hermann Hesse ,Günter Grass ஆகியோரும் தமது நாவல்களுக்காகவே அறியப்பட்டதையும் ஒப்பிடலாம். இங்கும் நாவல் இலக்கியம் தான் அதிக செல்வாக்குப் பெற்றுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் சிலகாலம் இலக்கியத்தில் மிகவும் சக்தி வாய்ந்த வடிவமாக, தமது உலகப்பார்வையும் தம் விழிப்புணர்வையும் வெளிப்படுத்த இளம் எழுத்தாளர்கள் சிறுகதை என்ற வடிவத்தையே தேர்ந்தெடுத்தார்கள்.

ஆங்கில சிறுகதை இலக்கியத்திற்கு Hemingway இன் வருகைக்குப்பின்னால் U.S. அமெரிக்காவில் சிறுகதை இன்னும் வளர்ச்சி பெற்றது. இரண்டாம் உலகயுத்தத்திற்குப் பின்னரே Hemingway போன்றவர்களின் பாணியிலான நவீன உலக சிறுகதையின் தரத்திற்கு ஒப்பான சிறுகதைகள் ஜெர்மனியில் முளைவிட்டன. யுத்த காலத்திற்கு பின்னரான ஜெர்மன் இலக்கிய வரலாற்றில் Wolfgang Borchert ,Heinrich Böll போன்றவர்கள் சிறுகதை ஆக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். குறுகிய காலம் வாழ்ந்தாலும் (41ஆண்டுகள்) சிறியதும், இறுக்கமான வடிவம்; விறுவிறுப்பு; புதிய, வாசககர்களின் சிந்தனையை மேலும் வளர்த்துச் செல்லும் உள்ளடக்கம் கொண்ட பல சிறுகதைகளை Wolfgang Borchert எழுதியிருக்கிறார். இவரது சிறுகதைகள் சில ஜெர்மனியிலிருந்து வெளிவரும் தமிழ் சிறுசஞ்சிகைகளில் தமிழில் வெளிவருகின்றன.

Heinrich Böll இன் ஆரம்பகாலச் சிறுகதைகள் உலகப்போரின் அனர்த்தனங்களை,சிறிய மனிதர்கள், விதவைகள், குழந்தைகள், அனாதைகள் ஆகியோர் ஆண்கள்/தந்தை இல்லாத சமூகம் ஒன்றில்/குடும்பமொன்றில் வாழ்ந்து தள்ள வேண்டிய விதியை வெளிப்படுத்தின. "எங்காவது யுத்தத்தினால் ஏற்பட்ட காயமொன்றிலிருந்து எவ்வளவு காலத்திற்கு சீழ் வடிகிறதோ அதுவரை இந்த யுத்தம் முற்றுப் பெறவில்லை"

கார்ட்டூன்: ஜெயந்தோ





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற பிரகடனத்தோடு இவரது சிறுகதைகள் பரவலான வாசகர்களைச் சென்றடைந்தன. 50 களுக்குப் பின்னரான கதைகளின் உள்ளடக்கங்கள் உலகப்போரில் ஜெர்மனி ஏற்படுத்திய கொடூரங்களை மறந்து விடும்; கவலைப்பட மறுத்து, நினைக்கவே மறுக்கும் இச்சமூகத்திற்கு அவர்கள் நிலையை இடித்து உரைப்பதாக இருந்தன. மேலும் வாழ்வின் தரத்தை உயர்த்துவதும் அதனையே வாழ்வின் ஜீவ நாடியாகக் கொண்ட சமூகம் உருவாகியது. மீண்டும் மீண்டும் அதிகாரங்களின் குவியல் கண்மூடித்தனமான அதிகாரங்களின் ஆசை, அரச அதிகாரத்தின் கடின போக்கு; அதனோடு ஒத்துப்போகும் கத்தோலிக்க மதம்; அதிகாரத்துக்குப் பணிந்து போகும் படித்தவர்கள், புத்தி ஜீவிகளின் சந்தர்ப்பவாதப் போக்கு போன்றவை Böll இன் கோபத்தைத் தூண்டியப் படைப்புக்களை இவற்றுக்கெதிரான உக்கிரமான வெளிப்பாடுகளாக்கின. அறுபதுகளில் ஜெர்மன் சமூகம் இரண்டாகப் பிளவு பட்டு நின்றது. அரச பொருளாதார மத நிறுவனங்களுக்கு ஆதரவான சமூகம்- அதற்கு எதிரான அணி. இவ்வெதிரணி பாராளுமன்றத்திற்கு வெளியேயான ஒரு சக்தியாக உருவாகி நின்றது . இதில் மாணவர்களும், இடது சாரிகளும்,முற்போக்கு இலக்கியவாதிகளும் ஒன்றிணைந்தனர். இவர்கள் தம்மை குழு 47 (Gruppe 47)என அழைத்துக் கொண்டனர். இங்குதான் ஒரு அரசியல் உருவக, மனிதத்துவ எழுத்தாளராக இன் நாட்டின் இராணுவமயமாக்கலுக்கும், பொய்ப் பிரச்சாரத்துக்கும் எதிராக, அரசியல் எச்சரிக்கையாளனாக,சமூகவியல் தீர்க்க தரிசியாக Böll தம்மை மேலும் இனங்காட்டினார்.

**அட்டைப்படம் நன்றி:** WILPF **எனும் பெண்கள் அமைப்பின் வாழ்த்து மடலிற்காக வரைந்தபடம். ஓவியர்:** Elizabeth Ragnham

**ஏனைய படங்கள் நன்றி:** Die Brűcke
International Viewpoint
WILPF



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு குரல்

இன்னுமொரு இனம் அழிக்கப்படுவது, இன்னுமொரு இனத்தினது சுதந்திரத்தையும் வாழும் உரிமையையும் மறுப்பது இவையெல்லாம் என்னைப் பொறுத்தளவில் கொழுந்துவிட்டெரியும் எமது இனத்தின் தேசியவிடுதலைப் போராட்டத்தின் முன் புறக்கணிக்கப்படவேண்டிய விடயங்கள். ஏனெனில் நான் எதையும் எம்மினத்தின் கண்களினூடாகத்தான் பார்ப்பேன். எனக்கு எம்மினத்தின் துயரங்கள் மாத்திரம்தான் தெரியும். மற்றைய இனங்களின் அழிவின் தாக்கம் என் மனசாட்சியை சில சமயங்களில் உலுக்கிடச் செய்கிறதெனிலும் இந்தச் சபலங்கள் வீரமிகு எமது தேசியவிடுதலைப் போராட்டத்தின்பால் நாம் கொண்டுள்ள மலையை விடவும் வலிய நம்பிக்கையை வீணாக்க விடமாட்டேன். தேசியவிடுதலைப் போராட்டத்திற்கான இந்த அரிய சந்தர்ப்பத்தை இந்த பாவம் பார்க்கும் மாயைகளால் நழுவ விடுவேனோ? இந்தப் போராட்டம் என் உயிருக்கு நேர். இதுதான் எம்மினத்தின் விடுதலைக்கு ஒரே வழி. யார் அங்கே தகுதி பற்றியும், மனிதநேயம் பற்றியும் கதைப்பது. இது எமது இனத்திற்காக முழுக்கமுழுக்க எமது இனத்தவராலேயே நடத்தப்படுகின்றது. இதைவிட இந்த போராட்டத்திற்கு வேறு என்ன தகுதி வேணும். இப்படித்தான் புத்தகங்களிலும் படிச்சிருக்கிறேன். அதை நடத்துபவர்கள் என்னுடைய இனத்தவர் என்று தெரிந்த பிறகு ஆதரிக்காமல் விடுவது மாபெரும் இனத்துரோகம் அல்லவா. மாக்ஸிசத்தையும் மனச்சாட்சியையும் ஒரு பக்கத்தில் கழற்றி வைத்துவிட்டு எமது உடனடிப் பணியான தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்குகொள்ளவேண்டிய தார்மீக கடமையை செய்ய இனி ஒரு கணமேனும் தாமதிக்கலாமா? குறை கண்டுபிடிக்க இதுவல்ல நேரம். தவறே விடாத மனிதரும் மனிதரோ? அப்படி என்ன பெரிய தவறை எம்மவர்கள் விட்டிருக்கிறார்கள். குறைந்தது மூன்று மாதத்திற்கொரு முறையாவது சொல்லி வைத்தாற் போல் வேறு ஒரு இனக்குழுவைச் சேர்ந்த குழந்தைகள் உட்பட நாற்றுக்கணக்கான அப்பாவிமக்களை படுகொலை செய்கின்றனர்.


என்னைப் பொறுத்தவரையில் இப்படிச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தான் சொல்வேன். சில வியாதிகளுக்கு மாற்று மருந்து இல்லை. அறுவை சிகிச்சை தான் ஒரே வழி. எல்லைப்புறக்குடியேற்றங்களைத் தடுக்க வேறொரு வழி இல்லாத பட்சத்தில் இத்தகைய கொலைகள் தவிர்க்கமுடியாததே. எம்மினத்தின் வீடிவிற்காய் புறப்பட்டபின் சிலவற்றை சகித்துக் கொள்ள பழகவேண்டும்.

அரசிற்கெதிராக போரைத் துவக்கி குழந்தைகளைக்கூட ஆயுதம் ஏந்தவைத்து போராட்டத்தை மக்கள் மயப்படுத்தி உள்ளது தேசிய விடுதலைப் போராட்டத்தில் சிறப்பம்சம் இல்லையா? சும்மா பாசிசம் பாசிசம் என்றெல்லாம் சொல்வார்கள், ஆனால் அதைப்பற்றிய விளக்கம் இதைச் சொல்பவர்களுக்குக் கொஞ்சமும் இல்லை. ஆனால் பாசிசம் பற்றி எனக்கு

www.tamilarangam.net

நன்றாகத் தெரியும் . அதன் பிரதான தன்மை வலதுசாரி தேசியவாத அரசியல். ஆனால் எங்கள் தேசியப் போராட்டத்தை நடத்துபவர்களின் தனிக்கட்சி அரசியலை நாம் இந்த நேரம் மறந்துவிடவேண்டும். மேலும் இன மேன்மை, பிற இனங்கள் பற்றிய இழிவான கருத்து பாசிசத்தின் முக்கிய குணமாகும். ஆனால் பல நூறு வருட வரலாற்றைக் கொண்டு நெடுங்காலமாக எமது பிரதேசங்களில் வாழ்ந்த சக இனத்தவரை வெளியேற்றுவதும் கிராமங்களில் புகுந்து கொன்று குவிப்பதும் பாசிசமாகாது. தனக்கெதிரான கருத்துக்களை வெளியிடுவதோ விமர்சிப்பதோ பாசிசம் என்று சொல்லி அவசரப்பட்டு சொல்லிவிடக்கூடாது. அப்படிச் செய்யும் குழு ஒரு தேசியப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் போது நாம் அந்த இனத்தைச் சேர்ந்தவராகிய நாம் அதை நிபந்தனையின்றி ஆதரிக்கவேண்டும். இடைக்கிடை சில நிபந்தனைகளை போட்டுப்பார்க்கலாம், ஆனால் எனக்குத் தெரியும், இத்தகைய குழுக்கள் இவற்றை பொருட்படுத்தமாட்டார்கள் என்று. இன விடுதலை என்ற பொதுவான கருத்தினால் நாம் அவர்களுடன் உடன்படவேண்டும். நீங்கள் கேட்டுக்கொண்டிருப்பது தேசியவிடுதலைப் போராட்டத்தை தவிர்க்கமுடியாமல் ஆதரிக்கும் ஒரு "முற்போக்கு " குரலை. இதன் தொடர்ச்சியை இனிவரும் இதழ்களிலும் நீங்கள் கேட்கலாம்.

ஜசோ



www.tamilarangam.net

சர்வவல்லமை பொருந்திய ஜனாதிபதியாக பதவியேற்ற நாலாவதுவருடத்தை விகாரைகளை அலங்கரித்தும், தலயாத்திரை செய்தும் கோலாகலமாகக் கொண்டாடிவரும் பிரேமதாஸ விடும் அறிக்கைகளையும் பேசும் பேச்சுக்களையும் மாத்திரம் தொகுத்தெடுத்துப் பார்த்தால் சமாதானத்தையும் அகிம்சையையும் பற்றி இவரைவிடவும் யாரும் கதைக்கவில்லையென்றும் யுத்தமே நடக்காத பௌத்தநாடு இலங்கை என்றும் எண்ணத் தோன்றும். நான் என்றும் சமாதானத்திற்கு தயாராகவுள்ளேன். நீங்கள் தான் ஒத்துழைக்கவேண்டும் என்று இவர் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கையில் மெய்யுருகும். நடைபெறும் யுத்தம் பற்றியோ இராணுவ நடவடிக்கை பற்றியோ நாட்டின் பொருளாதாரம் பற்றியோ ஒன்றுமே குறிப்பிடாமல் சமாதானம் வேண்டும் அகிம்சை வேண்டும் என்று பிரார்த்திக்கும் நல்ல பௌத்தனாக சிங்கள மக்களிடையே நல்ல முகம் காட்டும் அரசியல் இவரை காப்பாற்றிவருகிறது. தனக்கெதிராக ஒலிக்கும் எதிர்க்குரல்களை பிரேமதாஸ நசுக்கும்விதம் மிக குரூரமானது. பத்திரிகைகள் மீது தடையும் பத்திரிகையாளர் கொலைகளும் தென்னிலங்கையில் இன்றுள்ள ஜனநாயகத்தின் நிலையைச் சொல்லும். அன்மையில் சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கம் என்ற பெயரில் அரசுக்கெதிரான பத்திரிகையாளார்கள் நடத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் பிரேமதாஸாவின் ஜனநாயக முகமூடியை வெளியுலகிற்கு கிழித்துக்காட்டுவன. பொதுமக்களில் இருந்து தனது அரச மற்றும் கட்சிக்குள்ளே இருக்கும் தனது எதிராளிகளை கொலை செய்வது வரை கொலைப்படைகளுக்கு ஆணையிடும் குரூரத்தை வெள்ளைத்துணியாலும் அகிம்சைப் பேச்சாலும் மறைத்து வரும் இவர் நிறுவனப்படுத்தப்பட்டுள்ள சிங்கள இனவெறியை ஸ்திரப்படுத்துவதில் கடந்தகால இனவாதிகளின் வரிசையில் முக்கிய பங்காளியாகுறார். தனக்கு இலங்கையில் எவருக்கும் இல்லாத நிறைவேற்று அதிகாரம் உள்ளதென்பதை அடிக்கடி தெரிவித்துக்கொள்ளும் போதிலும் கொலைகளினாலேயே அதை நிரூபித்து வரும் இவரால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கரிக்கவோ அன்றி உருப்படியானத் தீர்வுகளை முன்வைக்கவோ முடியாது. வாறு இனவாதத்தினுள் புதைந்துள்ள பிரதிநிதி இவர். அன்மையில் இவரின் தூண்டுதலினால் இனப்பிரச்சினைத் தொடர்பாக முன்வைக்கப்பட்ட யோசனைகளில் கூட வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் புதியயோசனை அறிமுகப்படுத்தப்பட்டதேயொழிய இனப்பிரச்சினைக்கான தீர்வுகளுக்கோ சுயநிர்ணயஉரிமை பற்றிய பேச்சுக்கோ இடமேயில்லாதவாறு இவரது அரசு நடந்துகொண்டதை யாவரும் அறிவர்.

உயிர்குடிக்கும் யுத்தம் ஒருபுறம் எட்டிப்பிடிக்க முடியாமல் இருக்கும் விலைவாசி ஒருபுறம் என்று சாதாரண மக்கள் படும் துன்பத்தை சொல்லவோ எழுதவே தேவையில்லை. சில வருடங்களிற்கு முன் வாங்கக்கூடியதாக இருந்த சில அத்தியாவசிய பொருட்களையே வாங்கமுடியாத நிலையில் கொள்வனவுத்திறன் மக்களிடம் அற்றுப் போயுள்ளபோது ஏற்கனவே ஏழைகளாய் துன்பப்பட்டவர்களின் இன்றையநிலை பற்றி விளங்கும். ஆனால் போரைச் சாற்றி அன்மையிலும் நவரக ஆயுதங்களை அரசு வாங்கிக் குவித்துள்ளதாக தெரியவருகிறது. இதுதான் எமது இன்றைய இலங்கை.

www.tamilarangam.net

# காலம்



இந்தப் பயத்தினது நிழலின் பின்னே
ஓர் சந்தோஷம்
சிவ நடனத்தால் ஈர்க்கப்படுகின்றது.
பயமோ தனது இருள் மயமான பயணத்தை
நிறுத்தமின்றித் தொடர்கின்றது.
காலமென அழைக்கப்படும் முடிவிலி
அதனுடன் ஓடவில்லை
ஆனால் நானாக இருக்கும்
தனிமனிதன் மீது கொட்டுகின்றது.

கானல் நீர்போல
இந்தப்பயம் நீள்கின்றது.
தனிமனிதன் காலத்துடன் பந்தயம் பிடிக்கின்றான்
காலமோ எதனுடனும் பந்தயம் பிடிக்கவில்லை
அது முடிவற்றதும் அமரத்துவமானதுவுமாகும்
எனவே, காலமாக இருத்தல் நல்லதல்லவா!

க.கலாமோகன்.

பிரெஞ்சு மூலத்திலிருந்து செய்யப்பட்ட தமிழ் வடிவமே இந்தக் கவிதை.

www.tamilarangam.net



# ஆவேசம்!

வெண்பட்டுப் பனி விரித்த
சோலைக்குள் என் கால்கள்
பட்ட இடமெல்லாம் பார்த்தேன்
கருமை நிறம்.

வாழ்விழந்து, வனப்பிழந்து
வாயிழந்த கறுப்புலகின்
கண்ணீரே பனியாகிச்
சோலைக்கும் உங்கள்
சுகத்திற்கும் கீழ் இருக்கும்.

கூடுங்கள் கூட்டுங்கள்
ஐரோப்பியராகிக்
குதறுங்கள் அந்நியரை!

வங்கி அமைத்துலக
நாணய நிதியமைத்து
விருத்திக்கு என்றும்
விதியில்லாக் கடன் என்றும்
கத்தரி வெருளிகளின்
கைப்பிடியில் எமையடக்கிச்
சட்டங்கள் போட்டு
உங்கள் சரக்கு விலை போகிறது.

போலிப் பகட்டுப் புழுகு
ஜனநாயகத்தில்
வேலிஅடைத்து வேண்டாதவர் அழித்து
நாசி முறைகளிலே
நாட்டை நடத்துங்கள்

இன்னும் எத்தனை நாள்-எங்கள்
உலகில் இது நடக்கும்!
தாங்கிகளைக் குண்டுகளை
ஊர்திகளைத் தாண்டி உங்கள்

தடிப்பொல்லின் கட்டளைகள்
மீறும் நாட் தோன்றும்
மனிதர் மகிழ்ந்தெழுவார்!

அதுவரையும்
ஆவேசம்,கோபம்,
அடங்காமை உணர்ச்சிமயம்
அனைத்துமெம் சொத்தாகும்.

**ந.சுசீந்திரன்**

கார்காலம் 1990